# அட்டைப் படம்

இராகவன், இலக்குவன், மிதிலைச் செல்வி; பருத்தியூர், தஞ்சை மாவட்டம்; சோழர் காலம்; கி. பி. 10-ஆம் நூற்றாண்டு

---

# சந்திரசேகர பாண்டியர்

கிருஷ்ணதேவராயர் காலத்தில் சோழ நாட்டை 'வீரசேகர சோழன்' என்பவரும் பாண்டி நாட்டை "சந்திரசேகர பாண்டின்" என்னும் அரசரும் ஆண்டார்கள். சோழன் பாண்டியனைத் துரத்தி விட்டு பாண்டி நாட்டைக் கைப் பற்றிக் கொண்டான். பாண்டியனின் வேண்டுகோளின்படி கிருஷ்ணதேவராயர் தமது தானைத் தலைவர் நாகம நாயக்கரை தென்னாட்டுக்கு அனுப்பினார். நாகம நாயக்கர் சோழனை வென்று மதுரையைக் கைப்பற்றினார். இந்நாகம நாயக்கரின் மகனே மதுரையில் நாயக்கர் ஆட்சியை தோற்றுவித்த விஸ்வநாத நாயக்கர் என்று 'தஞ்சாவூர் ஆந்திர ராஜு சரிதம்' முதலிய நூல்களிலிருந்து அறிகிறோம். 'சந்திர சேகர பாண்டியன் என ஒரு அரசன் இருந்ததாகக் கல்வெட்டுகளில் குறிப்பு இல்லை. ஆதலின் இப்படி ஒரு பாண்டிய மன்னன் 16-ஆம் நூற்றாண்டில் மதுரைப் பகுதியில் இருந்தானா என்பது ஐயப்பாடு' என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் தாலூக்கா திருக்குளம்பூரில் கதலிச்சுரர் கோயிலில் ஒரு கல்வெட்டு உள்ளது கல்வெட்டு சக வருடம் 1424 (1502 கி. பி.) எழுதப்பட்டது. அப்பொழுது விசயநகர அரசன் சாளுவ இம்மடி நரசிம்மராயர். இப்பகுதியின் தலைவனாயிருந்தவன் நரச நாயக்கர். இவ்வூர் சந்திர சேகரபாண்டி மண்டலத்து கேரள சிங்க வள நாட்டில் இருந்தது எனக் கல்வெட்டு கூறுகிறது. இதற்குமுன்னர் பாண்டி மண்டலம் ராஜராஜப் பாண்டி மண்டலம் எனப் பெயர் பெற்றிருந்தது. அது இப்பொழுது சந்திர சேகரப்பாண்டியன் என்பவன் பெயரால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது சற்றேறக் குறைய கி.பி. 1500ல் நடந்திருக்க வேண்டும் இதிலிருந்து கிருஷ்ண தேவராயன் காலத்தில் இப்பகுதியில் சந்திரசேகர பாண்டியன் என்பவன் இருந்திருக்கிறான் என்பதை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. (புதுக்கோட்டைக்கல்வெட்டுகள் எண். 722)

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில் இத்துறை இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் இயக்குநர் இரா. நாகசாமி.

# கல்வெட்டு

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
25 MAR 1976
GOVT. OF MADRAS, MADRAS-



செத்திரு மடந்தைமன் ஸ்ரீ ராஜராஜன்
காலம் 985-1014

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்
இதழ் 7 ★ இராட்சச ஆண்டு ஐப்பசித் திங்கள் ★

வெட்டு
றைவார்க்கு
.டு சிறுதலூரு
என மற்றொரு
ட்டுகளில் குறிக்
இராஜகேசரியின்
திியை அறிகிறோம்.

# திருப்புறத்துறை பெருமானடிகள்

வெ. இராதாகிருஷ்ணன்
பதிவு அலுவலர்

தஞ்சாவூரிலிருந்து கல்லணை செல்லும் நெடுஞ்சாலையில் இருபத்திரண்டு கல் தொலைவில் காவிரியின் வடகரையில் கோவிலடி என்னும் அழகிய சிற்றூர் உள்ளது. இது பழங்காலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஊராகத் திகழ்ந்தது. இவ்வூரில் ஒரு பெரும்போர் நடந்ததென இலக்கியங்கள் குறிக்கின்றன. கோச்செங்கட்சோழன் சேரமான் இரும்பொறை என்னும் சேர நாட்டு மன்னனை வென்று சிறைப் பிடித்த இடம் இவ்வூரென வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கின்றனர். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் 'திருப்பேர் நகர்' என்று வழங்கப்பட்டதெனக் கல்வெட்டுகளால் அறிகிறோம். இவ்வூர் சிவாலயத்தில் உள்ள கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு 'எயி நாட்டு பிரம்மதேயமான திருப்பேர் நகர்' எனக் குறிக்கிறது. பழமையான சிவாலயமாகிய திருப்புறத்தை உடைய நகர்ப்பகுதி திருப்பேர் நகர் என்று வழங்கிற்று. இக்கோயிலிலுள்ள அனைத்துச் சாசனங்களும் இப் பழம்பெயரை உறுதி செய்கின்றன. ஆனால் இன்று இவ்வூர் கோவிலடி என அழைக்கப்படுகிறது. இவ்வூர் கல்வெட்டுகளில் கோவிலடி என்ற பெயர் எங்குமே குறிக்கப்படவில்லையாதலால் இப்பெயர் பிற்காலத்தில் ஏற்பட்ட ஒன்றாகத் தெரிகிறது.

இவ்வூரின் கிழக்கில் காவிரியின் வடகரையில் சிவபிரானுக்கு எடுக்கப்பட்ட கோயில் ஒன்றுள்ளது. அக்கோயில் இன்று 'திவ்ய ஞானேஸ்வரர் ஆலயம்' என அழைக்கப்படுகிறது. கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கோயில் கல்வெட்டுகள் மூலம் 'திருப்பேர் திருப்புறத்துறையும் பெருமானடிகள் கோயில்' என வழங்கப்பட்டதாக அறிகிறோம். இதன் வழி, 'திருப்பேர்' என்று ஊரின் பெயரும், அவ்வூரில் உள்ள 'திருப்புறம்' என்று கோயிலின் பெயரும் வழங்கியிருப்பதை அறியலாம்

இக்கோயிலிலுள்ள இறைவன் தற்காலத்தில் 'திவ்ய ஞானேஸ்வரர்' என்று அழைக்கப்படுகிறார். அம்மனின் பெயர் 'அகிலாண்டேஸ்வரி'. இராஜகேசரி கல்வெட்டுக்களில் 'திருப்புறத்துறவார்' என்றும் குறிக்கப்படுகிறது. முதற் குலோத்துங்கன் காலத்திலும், விக்கிரம சோழன் காலத்திலும் 'திருப்புறத்துறை மஹாதேவர்' என்று குறிக்கப்படுகிறது. ஆனால் அம்மனைப் பற்றி இக்கோயில் கல்வெட்டுகளில் குறிப்பேதும் காணப்படவில்லை.

இக்கோயிலில் ஏழு சோழர் காலக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று இராஜகேசரியின் காலத்தவையாகும். அவற்றில் ஒன்றில் ஆட்சியாண்டு தெளிவாக இல்லை. இராஜகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'செம்பியன் வேதி வேளான்' என்பான் திருப்பேர் திருப்புறத்துறைவார்க்கு திருக்கற்றளி எடுப்பித்தான் என்று குறிக்கிறது. இவன் 'கிளியூர் நாட்டு சிறுதலூருடையான் வேளான் வீர நாராயணனான செம்பியன் வேதி வேளான்' என மற்றொரு கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறான். இவன் திருவெறும்பூர் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்ட செம்பியன் வேதிவேளானாக இருக்கவேண்டும். எனவே இராஜகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டில் இத்திருக்கோயில் எடுக்கப்பட்ட செய்தியை அறிகிறோம்.

மற்றொரு கல்வெட்டில் மூலம் இராஜகேசரியின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் திருப்புறத்துறை பெருமானடிகளுக்கு மூன்று மா நிலம் அளிக்கப்பட்ட செய்தி குறிக்கப்படுகிறது. முதற்குலோத்துங்க சோழனின் நாற்பத்து நான்காவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'பாண்டிகுலாசனி வளநாட்டு பிரம்மதேயம் ராஜேந்திர சதுர்வேதி மங்கலத்து மஹாசபையோர்' விற்றுக் கொடுத்த ஒரு வேலி நிலத்தையும் அதன் எல்லைகளையும் குறிக்கிறது. விக்கிரமசோழனின் பதினொன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'பாண்டிகுலாசனி வளநாட்டு எயினூட்டு பிரம்மதேயமான திருப்பேர் பெருங்குறி மஹாசபையோர் இவ்வூர் வடபிடாகையான திருச்சடைமுடி உடைய மஹாதேவர் கோயில் திருமண்டபத்தே கூட்டம் குறைவறக் கூடியிருந்து பண்ணின பரிசாவது காலம் பொல்லாதாய் நம்மூர் அழிந்து குடி ஓடிப்போய்க் கிடந்தமையால் இவ்வூர் பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்து' எனக் குறிக்கிறது. இதிலிருந்து விக்கிரமசோழனின் பதினொன்றாவது ஆட்சியாண்டில்—அதாவது கி. பி. 1129 ஆம் ஆண்டில்—இவ்வூரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது என அறிகிறோம். மேலும் இக்காலத்தில் இவ்வூரின் அணித்தே திருச்சினம்பூண்டி என்ற பெயருடன் விளங்கும் திருச்சடைமுடி என்னும் ஊர் அக்காலத்தில் திருப்பேர்நகரத்தின் பிடாகையாய் இருந்ததென்றும் அறிகிறோம். பரகேசரி இராஜேந்திர சோழனின் மூன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'இவ்வூர் திருப்புறத்துறையும் பெருமானடிகளுக்குத் திருவிழா எழுந்தருளுகைக்கு நிவந்தஞ் செய்ய குன்றூட்டு மேல்களத்தூர் களத்தூருடையான் குப்பையாதித்த தேவனுக்கு' எழுமா நிலம் ஒதுக்கிக் கொடுத்ததையும், நிவந்தம் செய்யவேண்டிய முறையையும் குறிக்கிறது.

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் சதுரமான கருவறையையும், நீள் சதுர வடிவமான அர்த்த மண்டபத்தையும் கொண்டுள்ளது. கருவறைச்சுவர்களில் உள்ள தேவ கோட்டங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தியும் மேற்கே அர்த்தநாரியும் வடக்கே பிரம்மனும் காட்சியளிக்கின்றனர். அர்த்த மண்டபத்து தேவகோட்டங்களில் விநாயகரும் துர்க்கையும் காணப்படுகின்றனர். இவற்றில் தட்சிணாமூர்த்தியைத் தவிர மற்ற சிற்பங்கள் அனைத்தும் சோழர்காலத்தவையாகும். தட்சிணாமூர்த்தி மட்டும் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகத் தோன்றுகிறது.

இக்கோயிலுக்குரிய பரிவார தேவதைகளின் ஆலயங்கள் பழுதுபட்டுள்ளன. கருவறையின் தென்மேற்கே விநாயகருக்கென்று தனிச்சன்னதி உள்ளது. அதில் இடம்புரி விநாயகர் சிலையொன்று காணப்படுகிறது. கருவறையின் வடமேற்கே சுப்பிரமணியருக்கென்று தனி சன்னதி ஒன்றுள்ளது. அதில் சுப்பிரமணியர் மயில் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். சிவன் கோயிலின் அர்த்த மண்டப வாயிலில் இரண்டு அழகிய துவாரபாலகர் சிலைகள் காணப்படுகின்றன. இக்கோயிலில் நடராஜர், சிவகாமசுந்தரி, சந்திரசேகரமூர்த்தி, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, அஸ்திரதேவர், திருப்புளிச்சியம்மன் என்னும் கிராம தேவதை ஆகிய செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை யாவும் பிற்பட்ட காலத்தவையாகும்.

இக்கோயிலுக்கு வடக்கே திருச்சுற்றை ஒட்டினாற்போல் பிடாரிகோயில் ஒன்றுள்ளது. அது திருப்புளிச்சியம்மன் கோயில் என அழைக்கப்படுகிறது. அங்கு பிராம்மி, இந்திராணி, மாகேஸ்வரி, வைஷ்ணவி, வாராஹி, கௌமாரி, சாமுண்டி ஆகிய சப்த கன்னியர்களின் சிலைகள் உள்ளன. இவற்றில் பிராம்மியைத்தவிர ஏனையவை கி. பி. 9-10-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த சோழர்களின் படைப்புகளாகும் பிராம்மி மட்டும் மிகவும் பிற்காலச் சிற்பமாகக் காணப்படுகிறது.

# ஆர்மாமலை ஓவியங்கள்

S. T. பாஸ்கரன்

உறுப்பினர், மாநில தொல்பொருள் ஆலோசனைக் குழு, தமிழ்நாடு.

ஒரு டீ கப், ஒரு பாரீஸ் மிட்டாய் டப்பா, ஒரு தங்க நெக்லஸ், ஒரு டிரான்சிஸ்டர், ஒரு காமிரா, ஒரு கைக்கடிகாரம், ஒரு மூக்குக் கண்ணாடி . . . இவைகளை ஒரு சுத்தியால் நன்றாக நொறுக்கி, சில நூற்றாண்டுகள் புதைத்து வைத்து, பின் ஆஸ்திரேலியாவிலிருக்கும் ஒரு தொல்பொருள் நிபுணரிடம் கொடுங்கள் . . . '20-ஆம் நூற்றாண்டுச் சென்னை வாசியின் வாழ்க்கை முறைகளை ஆராய்க' என்று. சற்று மிகைப்பட்ட உதாரணம்தான், ஆனாலும், தென்னிந்திய ஓவியங்களை ஆராயப்புகும் கலை-வரலாற்று ஆசிரியனின் நிலை இதைவிட மிகவும் வேறுபட்டதாக இல்லை. சங்க இலக்கியக் குறிப்புகளைப் பார்த்தால், ஓவியக்கலை ஒரு உயர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டுமென்று நன்றாகத் தெரிகிறது. ஆனால், இன்று சித்தன்னவாசல், பனமலை, தஞ்சாவூர் ஓவியங்களை வைத்தே அழிந்து போன தென்னிந்திய சாஸ்த்ரீய ஓவிய பாரம்பரியத்தை நாம் உணர வேண்டியிருக்கிறது. இந்த சூழ்நிலையில், 1970-இல் வெளிக்கொணரப்பட்ட ஆர்மாமலைக் குகை ஓவியங்கள் [கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு] முக்கியத்துவம் பெறுகின்றன.

சென்னை-கிருஷ்ணகிரி சாலையில் ஆம்பூரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் மலையம்பட்டு என்று ஒரு கிராமம். அதை ஒட்டினாற் போல் ஒரு சிறு மொட்டை மலைத்தொடர். அங்கே குதிரைலாட வடிவில் ஒரு பள்ளத்தாக்கில், சுமார் 100 அடி உயரத்தில், கிழக்கு-மேற்காக இயற்கையாயமைந்த ஒரு குகை. 150 அடி நீளம், நெளிந்து, வளைந்து குகையின் வாய் வரை செல்லும் ஒரு கல் பாவப்பட்ட பாதையின் தடயம் நன்றாகத் தெரிகிறது. இக்குகையினுள் சுவரோவியங்கள், ஒரு மண் சுவற்றாலான சமணப் பள்ளியின் சிதைபாடுகள் இவைகளைக் காணலாம்.

தொல்பொருள் ஆராய்ச்சி இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில், கல்வெட்டுகளையே மிகுதியாகச் சார்ந்திருந்தது. ஆர்மாமலைக் குகையைக் கண்ட ராபர்ட் சிவல், அங்குக் கல்வெட்டுக்களைக் காணாத படியால், இரண்டே வாக்கியங்களில் ஒரு சிறு குறிப்பை எழுதி முடித்து விட்டார். [ஒரு கல்வெட்டும் அங்கே இருந்திருக்கிறது. அவர் கண்களுக்கு அது படவில்லை]. அவரைத் தொடர்ந்து வந்த பிரஞ்சு ஆராய்ச்சியாளர், ழூவோ துப்ராயல், இங்கு ஓவியங்களிலிருந்த தடயங்கள் தெரிகின்றன என்று மட்டும் எழுதி வைத்தார். இக்குறிப்புகள் ஆர்மாமலைக்கு முக்கியத்துவம் தருபவையாக அமையாததால், பின் வந்த ஆராய்ச்சி ர் கண்களுக்கு ஆர்மாமலை மறைந்தே போனது. [டாக்டர் மீனா

மற்ரெரு ...ative and social life under the pallavas" டில் இருப்புற ... 1939], 288-வது பக்கத்தில், ஆர்மாமலையைப் பற்றிக் குறிப் குறிக்கப்பட்டன ... யாண்டுகிரூர். இக்குறிப்பு, மேற் கூறிய இருவருடைய குறிப்பின் சாராம் சமே).

1970-இல் கலை வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்ட இருவரின் கவனத்திற்குத் துப்ராயலின் குறிப்பு வந்தது. துப்ராயல், வட ஆற்காடு மாவட்டம் என்று மட்டும் கூறி, அக்குகை இருக்கும் இடத்தைக் கூறுமல் விட்டு விட்டார். [அப்போது இம்மாவட்டம் கடப்பா வரை நீண்டிருந்தது]. இம்மலைத் தொடரைக் கண்டு பிடிக்க நான்கு மாதங்களாயின. மலையை அடைந்தவுடன், மாட்டுக்காரப் பையன் ஒருவன் குகைக்கு வழி சொன்ஞன்.[1]

தமிழ் நாட்டில் பண்டைச் சின்னங்களுடன் காணப்படும் இயற்கைக் குகைகள் ஏராளம். பெரும்பான்மையானவை சமணத் துறவிகளால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்குக் குகைத்தளத்தில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தைப் பற்றி சில அரிய குறிப்புகளைத் தருகிறது. இக்குறிப்புகள், குகைகளிலிருந்த சமண அமைப்புகளைப் பள்ளி என்றும் உறை என்றும் குறிக்கின்றன. சுனை அருகில் இருக்கும் குகைகளே இப்பள்ளிகள் அமைக்க தேர்ந்தெடுக்கப் பட்டன. [" கழாஅக்கால் பள்ளியுட் வைத்தற்றுல் சான்ருேர் குழாஅத்துப் பேதை புகல்" என வள்ளுவர் குறிப்பது இச்சமணப் பள்ளிகளில் வழங்கி வந்த ஒரு ஆசாரத்தையே, என்கிருர் ஜீவபந்து ஸ்ரீபால்] இக்குகைகளில் சமண மடங்கள், கோவில்கள், மதக் கோட்பாடுகளைப் போதிக்கும் பள்ளிகள் அடைக்கலமளிக்கும் மறைவிடங்கள் முதலிய வேறுபட்ட அமைப்புக்கள் இருந்தன. இக்குகையமைப்புகளின் தோற்றமும் முடிவும் பற்றி இறுதி யாக ஒன்றும் கூற முடியா விட்டாலும், கி.மு. 3-ஆம் நூற்றுண்டு முதல் ஓராயிரம் ஆண்டு இப்பழக்கம் நடை முறையிலிருந்தது என நிச்சயமாய்க் கூறலாம். இக்குகைகளில் உள்ளிடம் சிறு அறைகளாகச் சுவர்களால் பிரிக்கப்பட்டிருந்தது. இச்சுவர்களும் குகையின் மேற்தளமும் ஓவியங் களால் [murals] அலங்கரிக்கப்பட்டிருந்தன. இதற்குச் சங்க இலக்கியங் களிலும் ஆதாரங்கள் உண்டு. இத்தகைய சமண குகைக்கோவிலொன்று, சுவரோவியங்களுடன் போளூருக்கு அருகில் உள்ள திருமலை என்ற கிராமத்தில் இன்றும் இருப்பதைக் காணலாம்.

ஆர்மாமலை கி. பி. 10-ஆம் நூற்ருண்டு வரை அப்படிப்பட்ட ஒரு சமண ஸ்தலமாக இருந்தது. இக்குகையில் ஒரு சமணப் பள்ளி இருந்தது. 150 அடி நீளமுள்ள இக்குகையின் வாய் முழுவதும் ஒரு நீண்ட சுவரால் மூடப்பட்டிருந்தது. நடுவிலிருந்த வாயிலின் இருபுறமும் துவாரபாலகர் உருவம் புடைப்புச் சிற்பமாக அச்சுவற்றில் பதிக்கப்பட்டிருந்தது. சமணக் கோவிலின் ஒரு முக்கிய அங்கமான மானஸ்தம்பம் [இந்து ஆலயங்களின் ... ஸ்தம் போல்] இக்குகையின் முன் இருந்தது. அந்த ஸ்தம்பத்தில் ...ன அடிப்பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. அந்தச் சதுரப்பகுதியின்

நாற்புறமும் செதுக்கப்பட்டுள்ள சல்வெட்டொன்று, "ஸ்ரீ சுடை படாரர்" என்ற பெயரைக் குறிப்பிடுகிறது. குகையினுள்ளே சுவற்றுலான, மூன்று அறைகள் கொண்ட ஒரு சமணக் கோவில் இருந்தது. குகையின் மேற்புறமும், மண்சுவர் முழுவதும் ஓவியங்களால் நிரப்பப்பட்டு இருந்தன. சமணமத அமைப்பில் ஒரு பிரிவான நந்திகணத்தைச் சேர்ந்த துறவிகள் இங்கு இருந்தனர். சமணம் தழைத்தோங்கிய தொண்டை மண்டலத்தில், ஆர்மாமலை சமணப்பள்ளி ஒரு முக்கிய ஸ்தலமாக விளங்கியது. உதயேந்திரம் செப்புப் பட்டயத்தில் ரௌஹிணகுஹா எனக் குறிப்பிடப்படும் ஸ்தலம் இதுவே.

1970-இல் இக்குகையையடைந்த நம் இரு நண்பர்கள் கண்டவை, குகையின் மேற்புறத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதைந்த சுவரோவியங்கள், மண்சுவர் அமைப்பு, உடைந்த இருதுவாரபாலர் புடைப்பு சிற்பங்கள் ஆகியவற்றையே. ஓவியங்களைப் பார்த்தவுடனேயே கூறி விடலாம், அவை சாஸ்திரியபாரம்பரியத்தை சார்ந்தவை என. திக்பாலர் ஓவியத்தில் எஞ்சியுள்ளது அக்னியும், எமனுமே. அக்னி, தனது ஜோடி ஸ்வாவுடன் ஆட்டின் மேல் விரைந்து போய்க் கொண்டிருக்கிறார். சுமார் ஒரு சதுர அடி ஓவியமே எஞ்சியுள்ளது. உருவ அமைப்பு மகாபலிபுரம் பகீரதன் தபசுக் காட்சியிலுள்ள தேவாதி தேவர்களின் அச்சுப் பிரதிபலிப்பு. எமன் ஓவியத்தில் கீழ்ப்பாதி மட்டுமே காணப்படுகிறது.

குகையின் வலது பக்கம், மேற்புறத்தில் சமவசரண தாமரைப் பொய்கை ஓவியம், 7 அடி நீளம், உருக் குலைந்து காணப்படுகிறது. ஆர்மா மலையில் முக்கியமான சித்திரம் [Key painting] இப்பொய்கையே. கேவல ஞானம் பெற்ற தீர்த்தங்கரர் தனது முதற் பிரசங்கம் செய்யும் இடம் லட்சுமி வரமண்டபம். இம்மண்டபத்தைச் சுற்றி ஏழு பகுதிகள் [Regions]. அதிலொன்றே சுதிசுபூமி எனப்படும் தாமரைப் பொய்கை. மொட்டுகளும் தாமரை மலர்களும் காற்றிலாடிக் கொண்டிருக்கின்றன. கிளிப்பச்சை நிற இலைகளினூடே காவி நிறத்தில் மலர்கள். ஒரு யானையின் உருவம், சிதைந்து காணப்படுகின்றது.

இந்திய சாஸ்திரிய ஓவிய வரலாற்றில் ஆர்மாமலையின் இடத்தை நிர்ணயிப்பது இவ்வோவியமேயாகும். வடக்கே எல்லோராவிலும் தெற்கே சித்தன்னவாசலிலும் இத்தாமரைக்குளம் சுவரோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. செயல் விளக்க ஓவியம், அதை தீட்டிக் காட்டும் முறை இவ்வ[illegible] மூன்று இடங்களிலும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. ஒரே இ[illegible] வெவ்வேறு உருவங்களை வெவ்வேறு கோணத்தில் காட்டி, ஒரு சு[illegible] உணர்வை ஏற்படுத்தும் உத்தி இவ்விடங்களுக்குப் பொது. இன. லிங்கம் கள், யானை யாவும் ஒரே மாதிரி. கட்டிட, சிற்பக் கலைகளில் என்பது இவ்வித ஒற்றுமையை எல்லோரா கைலாசநாதர் ஆலயம், இலங்கை கோவில், காஞ்சி கைலாசநாதர் ஆலயம், மகாபலிபுர[illegible] கழுகுமலை வெட்டுவான் கோவில் போன்ற கலைப்[illegible] காணும் போது, ஓவியத்தில் இவ்வித ஒற்றுமை விய[illegible]

மற்றொரு க...
...ல் திருப்புறத்தொண்டை மண்டலத்திலுள்ள கலைப் படைப்புகளில் பல ...திக்கப்பங்களின் முத்திரைகள் பதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவர், ...சாளுக்கியர், ராட்டிரகூடர்கள், சோழர்கள் யாவரும் தங்கள் கை வண்ணங்களைக் காட்டி இருக்கிறார்கள். இந்தப் பல வம்சங்களின் கலைப் பாணிகளின் பாதிப்பு, ஒரு தனிக் கலைப்பாணியையே தொண்டை மண்டலத்தில் தோற்றுவித்தது. இராட்டிரகூடமன்னன் 3-ஆம் கிருஷ்ணன் [கி.பி. 939-966] தொண்டை மண்டலத்தை 25 ஆண்டுகள் ஆண்ட போது இந்தப் பகுதியிலுள்ள கலைப்படைப்புக்கள் ஒரு தனித்துவம் பெற்றன. இந்த அம்சம் இன்றும் கலை-வரலாற்று ஆசிரியர்களால் சரியாக ஆராயப் படாத ஒன்று. கட்டிட, சிற்பக் கலையில் இத்தனித்துவத்திற்கு உதாரணங்கள் பல உண்டு. ஓவியத்தைப் பொறுத்த மட்டில் ஆர்மாமலை மட்டுமே. எல்லோராவின் கலையம்சங்களும் [ராட்டிரக் கூடர்] சித்தன்ன வாசலின் பிரதிபலிப்பும் [பாண்டியர்] ஒன்று சேர்ந்த அந்த உன்னத காலக் கட்டத்தை அழியாமல் காப்பாற்றியது ஆர்மாமலைக் குகை.

1. 30-4-1970 அன்று, தமிழ்நாடு தொல்பொருள் இலாக்கா இயக்குநரின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு விரிவுரைக் கூட்டத்தில், ஆர்மாமலையைப் பற்றிய முதற் குறிப்புகள் வெளிக் கொணரப்பட்டன.

2. காண்க Dr. Edward Montgomery and S. T. Baskaran "Armamalai Paintings" Lalitkala 16 [Bombay 1974].

3. இக்குகை தளத்தில் அகழ்வாராய்ச்சி நடத்திய இந்திய தொல்பொருள் இலாகாவினர், கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை இக்குகையினுள் வாழ்ந்தவர்களால் உபயோகப்படுத்தப்பட்ட மண்பாண்ட ஓடுகளை Megalithic Pottery வெளிக்கொண்டு வந்துள்ளனர். காண்க. Indian Archaeology 1970-71 A review [New Delhi 1974] p. 34-35.



சமண ...
150 அடி ந...
மூடப்பட்டிருந்...
உருவம் ...டைப்பு...
கோ...லின் ஒரு மு...
...ஸ்தம் போல்|
...ன அடிப்பகுதி

...டன் கிருஷ்ணன் 14-ஆம் நூற்றாண்டு ஓவியம்
...ன்லை சன்னதி திருவரங்கம், திருச்சி மாவட்டம்

# மேலூரைச் சுற்றிச் சில கோயில்கள்

புலவர் வெ. அ. முத்துக்கண்ணன்

முகவை மாவட்டத்தைச் சார்ந்த மேலூரிலிருந்து பதினைந்து கல் தொலைவில் உள்ள 'கிளாதரி' என்ற ஊரிலிருந்து 2 கல் தொலைவில் அடர்ந்தகாடு ஒன்று உள்ளது. அங்கு மிகவும் சிதைந்த நிலையில் ஒரு கோயிலைக் கண்டேன். அதுபோல மேலூரைச் சுற்றிலும் பல கோயில்கள் அழிகின்ற நிலையில் உள்ளன. அவைகளையெல்லாம் பற்றிய குறிப்புக்களே இக்கட்டுரை.

கிளாதரி பகுதியில் உள்ள காடுகளில் ஏராளமான கலைமான்கள் இருந்தனவாம். அவ்வூர் 'கலைமான்தரி' என்று பெயர் பெற்றிருந்து பின்னர், அதுவே கிளைமான்தரி>கிளாதரி என்று மருவியிருத்தல் வேண்டும். இங்கு இவ்வடர்ந்த காடு, பேய், பிசாசு நிரம்பிய பகுதியென அஞ்சி யாரும் செல்வதில்லை. மரங்களை வெட்டினாலும், வேறு எதையேனும் எடுத்து வந்தாலும்கூட தீங்கு வரும் என்று நம்புகின்றனர். அருகில் பொய்க் கண்மாய், பொய்க்கோயில், பொய் முனியாண்டி கோயில் என்பவை உள்ளன. இங்கு பொய்கையொன்று இருந்து அழிந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இவை பொய்கைக் கோயில், பொய்கைக் கண்மாய், பொய்கை முனியாண்டி கோயில் என்று வழங்கப்பட்டு பின் மருவியிருக்க வேண்டும்.

## கல்வெட்டு

இக்காட்டின் நடுவில் வேலைப்பாடுடைய அழகிய கோயில் இடிந்த நிலையில் காணப்படுகிறது. அதனருகே $1\frac{1}{2}$ அடி அகலமும், 4 அடி நீளமும் உள்ள படிக்கல்லில் 24 வரிகளைக் கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் 'குலசேகர' என்றபெயர் ஒன்று மட்டுமே என்னால் படிக்க முடிந்தது. இது பாண்டியன் குலசேகரனைக் குறிக்கலாம். எனவே இக்கோயில் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம்.

## சிற்பம்

இக்கோயிலில் அழகிய தூண்கள் காணப்படுகின்றன. லிங்கம் இருந்ததற்கான பீடம் காணப்படுவதால், இது சிவன் கோயில் என்பது தெளிவு. இங்கு வலம்புரி விநாயகர், மாகேஸ்வரி, வைஷ்ணவி, இந்திராணி, கௌமாரி ஆகியோரின் சிலைகளும் காணப்படுகின்றன.

## காசுகள்

இங்கு 'முனியாண்டி கோயில்' என்று வழங்கப்படும் இடத்தே ஏராளமான நாணயங்கள் குறுக்கே வெட்டப்பட்டதாகக் கிடைக்கின்றன.

## பூஞ்சுத்தி

இக்கோயிலிருக்கும் இடத்திலிருந்து 5 கல் தொலைவில் பூஞ்சுத்தி என்றொரு ஊர் உள்ளது. இங்குள்ள கோயிலில் இறைவன் 'பூவலிங்கம்' என்று அழைக்கப்படுகிறார். இங்கு 'பூத்திருவிழா' என்ற விழாவொன்றும் நடக்கிறது. கீழவளவு அருகில் பஞ்சபாண்டவர் மலையில் உள்ள முருகன் கோயிற் கல்வெட்டில் 'பூஞ்சுத்தி' குறிக்கப்படுவது நோக்கத்தக்கது.

## இளமைநாயகி அம்மனும் இடைச்சி மண்டபமும்

மேலூரில் இருந்து நான்கு கல் தொலைவில் அரிட்டாபட்டி என்ற ஊர் உள்ளது. அங்கு பாண்டியன் நெடுஞ்செழியனின் பெயர் குறிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டு இருப்பது அனைவரும் அறிந்ததே. இங்கு பல மலைக்குன்றுகள் உள்ளன. கிழக்கில் இடைச்சி மண்டபம் என்றொரு குடவரையுள்ளது. கருவறையில் லிங்கமும், முன்னால் நந்தியும், இருபுறமும் துவாரபாலகர்களும், வலப்புறம் விநாயகரும், இடப்புறம் சுப்பிரமணியரும் வடிக்கப்பட்டுள்ளனர்.

அருகில் இளமைநாயகி அம்மன் கோயில் உள்ளது. அங்குத் துர்க்கை, அகோரமூர்த்தி சிலைகள் உள்ளன. வேலைப்பாடுடைய தூண்கள் காணப்படுகின்றன. நடுவயலில் ஒரே கல்லால் ஆன தேர்போன்ற அமைப்புடைய அழகிய பீடம் ஒன்று காணப்படுகிறது.

## பிற கோயில்கள்

கீழவளவினின்று கொங்கம்பட்டிக்குச் செல்லும் வழியில், மணிமுத்தாற்றங்கரையில் இரு பெரிய கோயில்கள் இடிந்து கிடக்கின்றன. இரண்டும் ஒரு பர்லாங் இடைவெளியில் அமைந்துள்ளன. லிங்க பீடம் காணப்படுகிறது. விநாயகர் சிலையொன்றும் உள்ளது. ஆற்றில் அடித்து வந்ததாகச் சொல்லப்படும் மகிஷமர்த்தினியின் சிலையும் இங்கு ஒன்று உள்ளது. இதனை நீலி கோவில் என்கிறார்கள். வேப்பனம் பட்டியில் உள்ள பட்டத்தளச்சி அம்மன் கோயிலிலும், கரையிபட்டியிலுள்ள வடக்கிவாச்செல்வி அம்மன் கோயிலிலும் இதே போன்ற சிலைகள் காணப்படுகின்றன. கரையிபட்டியில் 'ஒட்டைக் கோயில்' என்று வழங்கும் சிவன் கோயில் ஒன்றும் உள்ளது. இங்கும், லிங்கம், நந்தி, விநாயகர் சிலைகள் உள்ளன. இக்கோயிலும், மிகவும் சிதைந்து விட்டது இங்கிருந்து எடுத்துச் சென்ற கற்களாலேயே கொங்கம் பட்டியில் உள்ள மருதி கட்டப்பட்டது என்று பெரியோர்கள் கூறுகின்றனர். இதுபோல அழிந்து கொண்டிருக்கும் கோயில்கள் எத்தனை எத்தனையோ?

குன்றத்தும் மாடத்தும் கூட்டத்துங் கோபுரத்தும்
மன்றத்தும் முற்றத்தும் மண்டபத்தும் - சென்றுசென்று 189

நிற்பார் புருவம் நெறிப்பார் யிசைநல்யாழ்
கற்பார் மதனகலை கற்பிப்பார் - பொற்பாரும் 190

பொன்னென்பார் பூவென்பார் பூசுவார் பொன்னெழுத்து
மின்னம்பர் தாமரையிற் லிக்குவார் - சொன்னம் 191

சரியரைச்சந் தக்குழம்பு சாம்பிராணி யூட்டி
பொரியரைசந் தக்குழம்பு பூசி - வரியிரைச்ச 192

பூங்கொத் தணிவார் புழுகுபன் வீர்கதம்பம்
பாங்கொத்த தணிவார் பயோதரத்திற் - தூங்கு 193

கரக்கும்ப கும்ப கரடமத வேழம்
துரக்கும் சிவந்தெழுந்தான் தோள்மேல் - பரக்கும் 194

கருவண்டு மாதரார் கண்வண்டுந் தூது
வருவண்டு மொன்றாய் மயங்கத் - திருவண்டும் 195

பொற்றார் மணிமார்பன் பூங்களபத் தோளணையப்
பெற்றார் தமக்கென்றே பேறென்பார் - உற்றார் 196

அலர்தூற்ற நின்ற அயல்தூற்றக் கூந்தல்
மலர்தூற்றக் கண்ணூற்று மாறு - இலைதூற்றும் 197

கோடை மரம்போல் குறியிழந்து நாணிழந்துள்
ஆடை யிழந்தார் அணியிழந்தார் - வாடை 198

வருர்போதென் செய்வோம் வரிவளைக் கென்செய்வோம்
இரும்போதன் நெஞ்சென்றிசைப்பார் - கரும்போடு 199

இத்திக்கும் பாரும் சிவந்தபெரு மான்வடிவை
எத்திக்கும் பாருமினி யென்பாரும் - முத்திக்கு 200

வேளென்பார் பொன்னுலகாள் வேந்தென்பார் யாம்புணர்தற்
காளென்பார் வேல்முருக னென்பார் - தோளென்பார் 201

கண்ணென்பார் கண்ணிற் கருணைபெரு வாளெந்தப்
பெண்ணென்பார் வந்தபிழை நோக்கி - துண்ணென்பார் 202

ஆணென்பா ரெல்லா மரிவையரா கப்பிறவோம்
காணென்பாத் தோளணையக் காணென்பார் - வீணென்பார் 203

காவித் துடைக்கென்பார் காரணமுண் டோசெவ்வாய்
ஆவித் துடைக்குமெம தாவியென்பார் - தேவர் 204

தமக்கு நிழலான தாதகிச்செங் காடாய்
எமக்கு நிழலாவ தென்றே - தமைத்தினமும் 2[illegible]

ஆட்டும் பெரும்பெயரும் ஆசையைவெம் பந்தலைகொண் 246
டோட்டும் படிநீ யுதவிடாய் - கூட்டிக்

குடித்துந் தவிராநோய் கொண்டாற்கு வீசி 247
மடிக்குந் தலையு மதுவென்று - இடித்தெதிரே

நிற்பார்சங் கேதங்கள் நீக்காயே வின்றுமுதற் 248
சொற்பார் சங்கிலிப்பேர் சொல்லவொட்டோம் - பொற்பா

படைக்கலங்காத் தெம்மதனைப் பாரில்வென் றாலன்றி 249
யடைக்கலங்காத் தானென் றணைவோம் - இடைக்கலங்

சேமன் தனையடர்ந்த சேவகமெல் லாமிந்த
காமன் தனைக்கண்டால் காணுமே - சோமன் 210

குலத்திற் பிறந்த கொடுமையெல் லாங்கண்டோம்
கலத்திற் பறந்துவரும் காகம் - விலக்குறுமோ 211

பட்டமா னங்காத்த பல்லவரா யர்அடுத்தார்
இட்டமா னங்காத்தா லினமோ - விட்ட 212

கனவட்ட மேறுமுன்மேல் கற்றதமிழ் நாங்கள்
மனவட்டம் செய்தன்றோ வந்தேம் - தனவட்டக் 213

கும்பந் தனையடுத்த கொள்கையாற் மீனத்தை
நம்பு துணையாக நம்பினேம் - வெம்பு 214

மயல்கொடியாற் தம்மை வருத்துதலா லிந்த
கயல்கொடியா ரென்பதெல்லாம் கண்டோம் - வெயில் [மறைந்தும் 215

ஓடாத மாலைக்கு முன்காவி மாலைக்கும்
வாடாத மாலைக்கும் வாடினேம் - நீடு 216

பகற்பந்தம் கடைநாம் பாதியிராத் திங்கள்
இகற்பந் தமுங்காண்டு மென்பார் - விகற்பஞ்சேர் 217

முச்சங் கமும்நின் முகப்பில் முழங்கியிட
யிச்சங்கம் யாங்கள் யிழப்பதென்ன - கச்சங்கம் 218

மற்றுக் கிடந்தா லசையாம் மணிநாக்கு
முற்றுக்கிடந்து முழங்காவோ - மற்றெங்கண் 219

ஊற்று விடுநீரு முன்னஞ்ச நாட்டினுக்கு
நாற்றுவிடவு நடவுமன்றோ - தோற்றியபொற் 220

சங்கிலியு மான மதமு தறுகண்ணு
மெங்கள் களபமுலை யானைக்கு - முங்கள் 221

களபமத யானைக்குங் கண்டிருப்பவாசத்
துளபமுகி லேநீ துரந்த - களப 222

முழுதுங் கரும்பருந்த முற்றுமெங்கள் யானைக்
கெழுது கரும்புமில்லை யென்பார் - பழுதா 223

மகடார்த் துளிபவ ராகாயம் போற்பார்த்தத்
துகடீர நின்று துடைப்பார் - மகடூர்வார் 224

பந்த மகவினுக்கும் பல்லவரா யன்படைத்த
அந்த மதற்கு மளவுண்டோ - சந்த 225

வடியோ கருநெடுங்கண் மாதரா ரிந்தப்
படியே உளமும் பதைப்ப - நெடிய 226

மறுகில் மறுகி மயலு மயர்வு
றுகி முறுகி முதிர - இறுகி 227

முலையு மனமு முயிரு
ஒன்றுவுடல மிளகித் - தளரும் 228

மெலிய இவுளி யிடறு
மெலிய நலியப் - புடைய 229

ரறிவு மயர்வ
ரெனவே - துளிதுளியாய் 230

கத்தூரி பொட்டழிந்து கட்டழிந்த வேர்வையினல்
முத்தாரு முக்கினமு கைதுளிப்ப - கத்தூரி 231

கொண்டெழுதக் கூடாத கொம்பனையா ராங்குநிற்ப
வண்டொழுகத் தேனொழுகும் வாயினர் - அண்டையினிற் 232

(இசாங்க முற்றும்)

## பேதை

பேதைப் பருவத்தோர் பெண்பிள்ளை பேரிளம்பெண்
கோதைக் கிவளோ குலக்கொழுந்து - போது 233

குலையி லரும்பு குடுமியார் கோவில்
மலையில் விளையாடு மஞ்ஞை - கலைதேர் 234

விபுலை மலைவல்லி மெய்தழுவு மீசன்
கபிலைமலைச் சந்தனத்தின் கன்று - தபனகதிர் 235

பொன்பொதியுந் தோளான் புகழ்வழுதிப் பல்லவர்கோன்
தென்பொதியில் மேவுஞ் சிறுதென்றல் - அன்பால் 236

உலம்பில் புகழ்வழுதி யுத்துங்கன் கொல்லிச்
சிலம்பில் முலைத்தெழுசஞ் சீவி - இலம்ப 237

மருவோங் கிளஞ்சோலை மல்லையர்கோ னெங்கோன்
திருவேங் கடமலையிற் செந்தேன் - தருவோங்கு 238

மேடை வளர்பூவை வெள்ளையன்னப் பிள்ளையுடன்
கூடிவிளை யாடும் குயிற்பிள்ளை - ஏடவிழுங் 239

கொல்லையில்மந் தாமரைக் கொழுந்து மருக்கெழுந்து
மல்லையர்கோன் கச்சியிள மாங்கொழுந்து - பல்லவர்கோன் 240

பற்றலர் மேல்வைத்த பகைபோல வுள்ளடங்கிச்
சற்றெனினுந் தோன்றாத் தனத்தினள் - கற்றையிடு 241

வன்பிறப்புக் கூரை மழைத்துளிபோல் வந்துநின்று
முன்பிறக்கப் பின்பிறக்கு மூரலாள் - புன்பிறப்பால் 242

ஒன்று மறிவில்லா ரொண்பொருள்போல் யாவருக்குஞ்
சென்று பயன்படாச் செல்வியாள் - குன்றெனவே 243

மூடிக் கருமேன முன்செல்லப் பின்சென்று
கூடிக்கொள் மஞ்சனைய குஞ்சியாள் - மேடைக்குள் 244

விஞ்சிய சாளரத்து வெண்ணிலா வீழ விது
பஞ்சவனக் கிளிக்குப் பாலென்பாள் - விஞ்சிய 245

கோமே தகத்தின் கொழுந்துவிடு மொண்சுடரைத்
தேமேவும் பூவைக்குத் தேனென்பாள் - காமேவு 246

கோதி யிளமான் குருளைக்கு மாணிக்கச்
சோதி யிளமான் றுளிரென்பாள் - மாதர் 247

எழுங்குங் குமமுலைகண் டேந்தியதன் மார்பிற்
செழுங்குங் குமச்செப்பைச் சேர்ப்பாள் - ஒழுங்குபடச் 248

சாலரோ மக்கெழுந்து தான்கண்டு மைக்குழம்பால்
நீலரோ மக்கொழுந்தாய் நீட்டுவாள் - வாலமதி 249

கண்டாற் றரச்சொல்லிக் கண்பிசைவாள் பொற்கலத்தி
லுண்டா ருடனெல்லா முண்டொழிவாள் - சண்டையிட்டு 250

வாடிக் கடைக்கண்ணால் வாலிபரை மாரன்கை
காட்டிக் கொடாத கயற்கண்ணாள் - பாட்டிற் 251

குழலை விழமுனிந்து கோடாய் முன்னின்று
மழலை மொழிகள் வடித்துத் - தொழுதியொடு 252

முத்துக் குதம்பையிட்டு முச்சிமுடிப் பிச்சிமலர்க்
கொத்துக் கதம்பங் குமுகுமென - சித்ரநுதற் 253

பொட்டுமிட்டு மையுமிட்டுப் பொற்றண்டைச் சட்டியரைப்
பட்டுமிட்டு வீதியினிற் பையவந்து - கட்டிச் 254

சிறுசோ றடனினைவாள் சிற்றிலிடை முறத்தாற்
கறிசோ றடுகின்ற காலைப் - பொறிவேங்கை 255

வெற்றிக் கொடியான் விருதரசர் தம்பிரான்
கொற்றக் குடையான் குலதீபன் - கற்றைக் 256

கவரி யிரட்டக் கனமுர சட்டத்
துவரி யிரட்டித் தொலிப்பத் - துவரிதழார் 257

சங்கீத மேளந் தளங்கத் தடவிகட
வெங்கோப மால்யானை மீதுவரப் - பைங்கோதை 258

யாரென்றாள் மல்லை யரசென்றார் கண்குளிரப்
பாரென்றாள் கண்ணின் பயனென்றார் - பேரன்பால் 259

சிற்றன்பால் நின்ற சிறுமிக் கிவையுரைப்ப
பொற்றம்ப மான புயத்தானைக் - கொற்றவனை 260

வல்லவ ராயன் வழுதிப் பெருமாளைப்
பல்லவ ராயனைப் பார்த்து நின்று - வல்லியவள் 261

செண்டுங் கயலுடனே சேரும் புலிக்கொடியைக்
கண்டு பயந்துரெண்டு கண்புதைத்தாள் - கொண்டிடுமென் 262

சிற்றி லழியாமல் செப்புமின்க ளென்றலுமே
முற்று மடவாரோ முத்தமிட்டுப் - பொற்றொடிகே 263

னின்னானில் சிற்றி லழிக்கவழு திப்பெருமா
னின்னானிற் சிற்றி லவையழித்தால் - மின்னாராற் 264

சொல்லத் தகுமோ தொழுதுநீ சொல்லுகென
அல்லொத்த கொந்தளகத் தன்னைமீர் - மெல்லவவன் 265

எறுமத வேழத்தி லென்னையுமங் கேயிருத்தி
நாறுமலர்க் காவியந்தார் நல்குமெனச் - சீறியழப் 266

பாவாய்ச் சிவந்தெழுந்த பல்லவர்கோன் பைந்துடையல்
பூவா யுனக்குப் பொறுக்குமோ - காவாகம் 267

பொன்னாடன் மால்யானை பூமாலை கைக்கொண்ட
தன்னாள் விடுத்த தறியாயோ - புன்னாலை 268

வாங்கற் கெளிதோ மழவர்க ளல்லாதார்
தாங்கற் கெளிதோ தரிலென்பார் - ஆங்கோதாய் 269

மங்கை யெனும்பருவம் வந்தாலே போதுமுன்றன்
கொங்கை யதுபறித்துக் கொள்ளாதோ - ஆங்கவன்றன் 270

பாமாலை யத்தனையும் பாடிப் படித்திடலப்
பூமாலை தானே பொருந்தாதோ - ஆமாலை 271

கொங்கென்று தார்பெறினுங் கூழைமுதி ராய்முடிப்பத்
தெங்கென்று தாய்மா ரியம்புதலும் - ஆங்கதனில் 272

இன்னடைப்பெண் பேதமையி லேழுமுழ நாறுமுழம்
பின்னிடகண் டாலிமழை பெய்துநின்றாள் - அன்னையரு 273

மந்தாமஞ் சிற்றி லழித்தற்கா யித்தாமந்
தந்தான்மற் றிந்தா தரியென்று - கொந்தாயோர் 274

காவிதனைக் காட்டியக் கன்னிதனக் கன்னைமா
ராவி தனைக்காட்ட வம்மலரைப் - பாவைக்குச் 275

சூட்டினாள் பூண்முரல தொண்டினாள் தொட்டிலில்லைத்
தாட்டினா லிங்கிருப்ப வாங்கொருத்தி - நாட்டுத் 276

## பெதும்பை

தெரிவைய ருக்குட் சிறிய தனத்திற்
பெரிய தனத்தாள் பெதும்பை - உரியமத 277

னூட்டுவிக்கும் பொற்பாவை யாடவரை லாடசிங்கி
யூட்டுவிக்குங் கற்பகத்தின் பொற்கொழுந்து - காட்டிற் 278

சுகந்த வனத்திலொரு தோகைமயில் காணப்
புகுந்து விளையாடும் பொன்மான் - உகந்த 279

பிரதி கிளையா விளவயதிற் பெண்மை
பிரதிக் கொருகா லிளையாள் - விரகத்தாள் 280

தேற்று கபிலைத் திருநாட் டிடைப்பழங்கள்
தோற்று கதலித் துணர்த்தாறு - போற்றும் 281

வழுத்தூர் மருத வயலி விளம்பாளைக்
கழுத்தூருங் கன்னிக் கமுகு - செழித்திடமுன் 282

னேன்மு விளமைநலந் தோன்றத் துடங்கியிடு
மூன்றாம் பிறைபோல் முளைத்தெழுந்தாள் - தேன்றுவு 283

கொத்து வளர்சோலை கோனாட்டில் செங்கரும்பு
முத்து விளைந்தனைய மூரலாளை - முத்தாணி 284

யெங்கும் பரவரவ மெட்டனைச் சூரியன்பால்
வரங்கும் விடமனைய வாள்விழியாள் - ஓங்குமதி 285

கோடு வளைத்தமதிட் கோட்டைக்கு மாரவிளங்
காடு வளர்த்த கருங்குழலாள் - வேடன் 286

துணிச்சுட்டி யாடவரைத் தூண்டி விட்டதென்ன
நுணிச்சுட்டி யிட்ட நுதலாள் - தனிச்சமராய் 287

முச்சிலை கூனி முதுகிற் படத்தெரித்த
பொற்சிலை கூறும் புருவத்தாள் - நற்சொல் 288

வளமா ரிரதிக்கு மன்மதவே விட்ட
யிளமா தளைபோ லிதழாள் - அளவாய் 289

உருத்திரண்ட சானையில்வைத் தொப்பமிட்ட வாளைக்
குருத்திரண்டு போலுங் குறங்காள் - மருத்திரண்ட 290

காற்குன்ற மன்வபுயக் காமவேள் முன்னேட்டம்
பாற்கின்ற அல்குல் பரப்பினள் - யார்க்கும் 291

இறந்தகா லந்தாங்க வெம்மனேற் றியுஞ்
சிறந்தனைக் கஞ்சிலர்பாற் செய்வாள் - கறந்தபாற் 292

புக்கவிரை போற்புடை பெயர்ந்துநல் யாழிற்
சிக்கிவிழி சொருகுஞ் சிந்தையாள் - மிக்க 293

மழவர் மகளை வழுதியார் கோன்வேட்ட
கிழமை மிகவிரும்பிக் கேட்பாள் - குழமகட்குப் 294

பாவை தனைவேட்டும் பல்லவர்கோன் ருதிக்காய்
பூவை தனைவைத்துப் பூசிப்பாள் - காவிமுத 295

உள்ளமுஞ் சூது முடையுநடை யுந்துடியுங்
கள்ளமுந் தன்முகத்தே காட்டினள் - வள்ளமுலை 296

எட்டி ரவிக்கொக்க யிலங்குநவ ரெத்னமணிப்
பட்டிரவிக் கைகுட் படப்புனைந்து - வட்டக் 297

குதம்பை யாரிந்து குரும்பை சுமந்து
பதம்பெய் சிலம்பு பதைப்பப் - பெதும்பைப் 298

பருவமா யோர்மின் பனிவரைமே லேறு
முருவமா யோர்குன்றத் தேறி - வெருவுமான் 299

கன்றுங் கிளியுங் களிமயிலு மோதிமமு
மென்றுங் கிவையோ ரிடத்திருந்து - நன்றுகமழுங் 300

காடும் படிபோ லரிவையர்கள் தற்சூழப்
பாடுங் கழங்கெடுத்துப் பாடுதற்கு - நீடுசுடர் 301

வாழியர்கோன் வெற்றி வழுதியர்கோன் மல்லைவரு
கோழியர்கோன் கொற்றக் குடைபோன்றும் - வாளி 302

திருந்துஞ்சி வந்தான் சிவனைநினைந் துள்ளந்
திருத்துந் திருத்தா ளிரண்டு - மருத்தேன் 303

தருகார் முழுநிலந் தாதகிப் பொன்னு
முருகார் தொடைய வொருமூன்றும் - பொருகாமன் 304

தொண்டையர்கோன் மல்லையர்கோன் சோழன் மருகனெனத்
தண்டமிழோர் பாடுந் தமிழ்னன்கும் - கொண்ட 305

குடைக்காமன் கோழியர்கோன் கொற்றக் குடைகீ
ழடைக்கலம் புக்குண டைந்தும் - புடைக்கும் 306

அரசிருந்த வாசலான் அத்தமிழ்த்தேர் கூடல்
அரசிருந்த பீடக் காலாறும் - வருசிவந்தான் 307

ஒப்பவோ லைக்கடங்கா வொன்னலார் நாடிழந்து
கப்பலே றிப்போங் கடலேழும் - செப்பமுடன் 308

பொன்வங் கழற்கிங் பொருந்தப் புரிந்தாட
மன்னன் கரடதட மால்யானை - மின்னுஞ் 309

சுடர்தன் டெடுத்துச் சுழற்றுந் தடக்கைத்
திடக்கிம் புரிக்கட் சினத்துப் - புடைக்கும் 310

பிடற்குன்ற மெற்றிப் பிளக்கின்ற வொற்றைக்
கடக்கும்ப வெற்றிக் களிறு - நடக்கின்ற 311

செந்தா ளெழும்பச் செகவேந்தர் தற்சூழ
தந்தாது மோசை நான்ஞெலிப்பச் - சிந்தூர 312

வேழம் புறஞ்சூழ வில்லவர்கோன் பல்லவர்கோன்
சோழன் திருமருகன் ரேன்றுதனும் - வாழும்பொற் 313

றேரணவி திக்குள்வந்து தோழிபருந் தானுமாய்
வாரணவி தித்துங்க மன்னவனே - ஓரணங்கு 314

கண்டா ளொருனுங் கண்டறியாள் மாலுளந்துக்
கொண்டாள் கொடிக்கோர் கொழுகொம்பாய் - வண்டாய் 315

எழுந்து தடந்தோ ளிரண்டின்மே லாசைக்
கொழுந்து படந்தேறிக் கொள்ளச் - செழுங்குவளை 316

கள்ளமதன் வாதுக்கோ காதுக்கோ வார்த்தைசொல்லி
லெள்ளவுங் கேளா திவள்நிற்ப - துள்ளுகழங் 317

காடிய சேடியர்கள் அன்னைமாற் கீதுரைப்ப
வாடிய மெய்யு மனமுங்கண் - டோடி 318

அழைத்துக் கொண்டாசைக் கடி கொண்டு மைய
லிளைத்துக கொண்டாள்மக ளென்றெண்ணி - குழைத்துக்கொண் 319

டங்கமெல்லாஞ் சந்தனச்சே ருட்டியவ ளன்னைமார்
பங்கமாய் நின்றகச்சிப் பல்லவர் - எங்கள் 320

குடியிற் பிறந்த குலக்கொழுந்தை நீயிப்
படியெப் படிச்செய்வாய் பண்போ - கொடியசிலை 321

ஊன்றப் பொருமதனுக் கொப்பாக நீயொருவன்
றோன்றக் கலைவளைகள் தோற்றேமே - என்றகொடி 322

வெங்கயலைக் காட்டி விழிக்கயலைக் கைக்கொண்டால்
செங்கழுநீ ரங்கழுநீர் செய்வித்தாய் - பங்கழிய 323

வேங்கிச் சிறுத்தவிடை யெங்கள்மான் கன்றினையுன்
வேங்கைப் புலிக்கி விருந்திட்டாய் - ஈங்குநிற்கில் 324

ஏதாகு யோயின்ன மென்றவளைக் கொண்டேக
வாதா மதனிரண்டு வாளிதொட்டான் - சூதான 325

கொங்கைக் கடுத்த கொடுமையறி யோமப்பால்
வெங்கட் களியானை மீதுவர - மங்கை 326

மங்கை

யவளொருத்தி வேளிரதியாங்கொருத்தி பின்னை
யவளொருத்தி யாக விருந்தாள் - பவளநிறப் 327

பச்சைப்பொட் டிட்டநுதல் பட்டுத்தைத் திட்டமுலைக்
கச்சுக்கட் டிற்புவியைக் கட்டழிப்பாள் - நச்சிக்கொள் 328

வண்களப ரஞ்சிதமான் வண்ணவளைக் கச்சிவரு
பெண்களப ரஞ்சியொரு பெண்ணமுதம் - கண்களிக்கும் 329

வாலக் கருங்குயிலோர் மாதர்க் கபிஷேக
மேலக் கருங்கூந்த லிந்திராணி - சோலைக் 330

கரும்புரச மன்ன கவிதைரசம் போல
விரும்புரச தாளியின்ப மென்பூ - அரம்பையுருப் 331

பல்பாய் நடுவொசிந்து பல்லவநங் காடவர்கோன்
வெண்பா வென நுடங்கு மின்னிடையாள் - திண்பாம் 332

பரத்தைப் பிடித்துப் பதைக்கப் பதைக்கச்
சுருக்கிட் டழுத்திச் சுழற்றி - பொருப்பிற் 333

கனத்துக் கனத்துக் கதிர்த்துக் கதிர்த்து
சினத்துச் சினத்துச் செருக்கி - குனித்துப் 334

பருத்துப் பருத்துப் பனிப்பொற் பொருப்புத்
தரத்தில் துரத்தித் தகர்த்து - செருத்தத்தி 335

முத்துக் குடத்தில்முட்டி முக்கடத டக்களிற்றன்
மத்தகத்தி னிற்புடைத்து வட்டமிட்டு - நித்திலத்து 336

கச்சிற் பனைத்துமிகக் கட்டுமட் டூர்ப்ரசித்த
வச்சிரமிட்டி ழைத்தசெப்பு வட்டடர்த்து - மெச்சுசக்ர 337

வாளத்தை யட்டுமணி வள்ளத்தை வாட்டியண்ட
கோளத்தை முட்டுமிரு கொங்கையாள் - வாளோ 338

முத்தன்ன முல்லை முருந்தன்ன மாதளையின்
வித்தன்ன கண்ணகில்போல் வெண்ணகையாள் - குத்ர முடன் 339

வேட்ட மதவேள் விழியம்பி ரெண்டுருவப்
பூட்டியசிங் காடிப் புருவத்தாள் - நீட்டுகலை 340

கற்றவரைக் கொற்றவரைக் கட்டிளமைத் துட்டர்களை
பற்றவரைப் பட்டுமனத் தட்டுருவி - கொற்றவரைக் 341

கொட்டமிடக் சுற்றுமிகக் குத்திரவித் தைக்கிதமித்
தட்டதிசைக் கொட்டுவிடத் தைக்கறுவிக் - கட்டழகு 342

கொள்ளங் குழைத்தரள கொப்புருவி மையுடனே
கள்ளங் குழைத்தெழுது கண்ணிணள் - வள்ளைதுவ 343

ளாங்க முகத்துக் கழகெறிப்ப வேமிடறு
பூங்கமுகுக் கொற்ற புலன்கொம்பு - பாங்காய் 344

மருங்குழலால் வண்டிற்கு வண்டெனவே சுற்றங்
கருங்குழலா லாவி கரைப்பாள் - இருங்குழலாள் 345

ஓசைக் குழலனைய ஒருரையே பேசில் மைந்தர்
ராசைக் குழல அயர்விப்பாள் - பூசி 346

முடித்துக் களித்து முகந்துளக்கித் தேறல்
வடித்துக் குடித்து மணிப்பந் - தடித்து 347

விளையாட வம்மினென மெல்லியலா ரோடும்
வளையாட வீதியில் வந்தே - இளையாள் 348

குருக்குங் குமக்கொங்கை யைக்கண் டெதிர்க்கும்
பொருக்கண் டிடத்தும் புடைத்தும் - செருக்கும் 349

தரப்பெண் களுக்குச் சமத்தென் றுரைக்கின்
பெருக்குந் தனக்குன் றசைக்குஞ் - சரிப்பெண் 350

களைக்கண் டுனக்கென் றெனக்கென் றுரைத்துந்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 351

துரைப்பே ணகஞ் . . . . சுறுக்கென் றிடச்சென்
றரிப்பந் தரிப்பந் தடிப்பான் 352

(அடுத்த இதழில் தொடரும்

## இராமாயண ஓவியங்கள்

வடஆற்காடு மாவட்டம் செங்கம் வேணுகோபால சுவாமி கோயிலில் கி. பி. 17-ம் நூற்றுண்டின் தீட்டப்பெற்ற இராமாயண ஓவியங்களை இத்துறை கண்டுபிடித்துள்ளது. இக்கோயில் கி. பி. 1700-இல் செஞ்சி நாயக்கர்களால் கட்டப்பட்டது. இக்கோயிலின் மகாமண்டபத்தில் கோயிலைக் கட்டிய நாயக்க மன்னனின் உருவச்சிலையொன்றும் காணப்படுகிறது. இம்மண்டப விதானத்தில்தான் இவ்வோவியங்கள் உள்ளன.

இராமகாதை முழுவதும் பட்டாபிஷேகம் வரை தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு காட்சியிலும் தமிழில் நாயக்கர் காலப் பேச்சு மொழியில் விளக்கமும் எழுதப்பட்டுள்ளது. உட்பகுதியில் மட்டுமே ஓவியம் எஞ்சியுள்ளது. வெளிப்புறம் இருந்த ஓவியங்களில் தெலுங்கிலும் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. வால்மீகி இராமாயணத்திலும் கம்ப ராமாயணத்திலும் இல்லாத, ஆனல் தெலுங்கு மொழியில் அமைந்த அரங்கநாத, அத்யாத்ம இராமாயணங்களில் உள்ள காட்சிகள் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## விஜயநகரர், போசளர் ஓவியங்கள்

திருவண்ணமலையில், அருணசலேஸ்வரர் கோயிலில் திருச்சுற்று மாளிகை 2-ஆம் தளத்தில் விஜயநகரர் காலத்து ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவண்ணமலை, சிறிது காலம் போசளர்களின் தலைநகரமாகவும் விளங்கியது. இங்குள்ள புலியுடன் போரிடும் வீரன் ஒருவனின் ஓவியம் குறிப்பிடத்தக்கது. இது போசளர்களின் சின்னம் ஆகும். மற்றொரு ஓவியம், அன்னத்தின் மீதூர்ந்து மலர்க்கணை ஏந்திச் செல்லும் மன்மதனுடையது. விஜயநகர மன்னர்கள் 'கஜவேட்டை கண்ட' காட்சியும் கிருஷ்ணதேவராயரால் எடுக்கப்பட்ட கோபுரத்தில் எழிலோவியமாகத் திகழ்கிறது.

*



->

# கள்ளப் பெரம்பூர்

G. C. பட்டாபிராம், பி. ஏ.

இந்த சிறு கிராமம் பூதலூரில் இருந்து ஆறு கல் தொலைவில் தஞ்சாவூர் பூதலூர் சாலையில் உள்ளது. சாலை நல்ல தார் ரோடு. பஸ்கள் வசதியாக செல்கின்றன. இங்குள்ள கைலாசநாதர் கோயில் முதல் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டது என்று ஸ்ரீபாலசுப்பிரமணியஅய்யர் நினைக்கிறார். இது ஓர் அழகிய சோழர் கற்றளி. இக்கோவிலில் அழகான சிற்பங்களோ, விக்கிரகங்களோ கிடையாது. கோவில் வெகு அழகாக இருப்பதால் கலாரசிகர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய கோவில். இக்கோவிலில் உள்ள கிராம தேவதையின் விக்கிரகமும், பிரதோஷ தேவரின் விக்கிரமும் அழகாக உள்ளன. இது தவிர நடராஜர், சோமஸ்கந்தர் முதலிய விக்கிரங்களும் உள்ளன.

இக்கோயிலின் கோபுரம் மூன்று அடுக்குகளை உடையது. முதல் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டது. சிதம்பரம் கோயிலில் உள்ள ஏழு அடுக்கு கோபுரமும் ஆந்திர பிரதேசத்தில் உள்ள கோயிலில் இருக்கும் ஒரு அடுக்கு கோபுரமும் இக்காலத்தில்தான் கட்டப்பட்டன.

இக்கோவிலில் நாம் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கல்வெட்டுகளைக் காண்கிறோம். ஆறு கல்வெட்டுகள் உள்ளன. அவைகளில் இரண்டு கோபுர வாயிலின் இரு பக்கங்களிலும் உள்ளவை. அவைகள் இக்கோவிலை ஸ்ரீகயிலாயம் என்றும் இறைவனை ஸ்ரீகுலோத்துங்கசோழ ஈஸ்வரமுடைய மஹாதேவர் என்றும் குறிக்கின்றன. இவ்வூரை ராஜசுந்தரிசதுர்வேதிமங்கலம் எனவும் குறிக்கின்றன. ஒருவேளை ராஜசுந்தரி என்பது குலோத்துங்கதேவரின் தேவியாக இருக்கலாம். மூன்றும் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு இவ்வூரைப் பிரம்பு எனக் குறிக்கிறது.

முதல் குலோத்துங்கனும் மூன்றும் குலோத்துங்கனும் இக்கோவிலுக்கு பல நிவந்தங்கள் அளித்திருக்கிறார்கள். இங்குள்ள ஒரு கல்வெட்டின் மூலம் மூன்றும் ராஜராஜன் காலத்தில் கோயில் பணத்தைக் கையாடியதால் ஒரு கணக்கர் வேலையில் இருந்து நீக்கப்பட்டதையும் அவனுடைய சுற்றத்தாரும் இனிமேல் சபையின் கணக்குகளை எழுத கூடாது என்று அறிவிக்கப்பட்டதையும் அறிகிறோம். தஞ்சைக்கு அருகில் இக்கோவில் இருப்பதால் கலா ரசிகர்கள் சுலபமாகப் போய்ப் பார்க்கலாம்.

---

**திருவெண்காட்டில் கிடைத்த கண்ணப்பர் செப்புப் படிமம்**
**இராஜராஜன் காலம் கி. பி 1000**

## வரலாற்றுச் சிறப்புவாய்ந்த மைல்கல்

திருவண்ணமலையில் மலையைச் சுற்றிவரும் பாதையில் 13-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த ஒரு மைல்கல்லைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டு பிடித்துள்ளது. அக்கல் இக்கால மைல்கல் போலவே உள்ளது. அதில் பாண்டியர் இலச்சினையான இரண்டு மீன்களும் நடுவில் செண்டும் காணப்படுகின்றன. இதன்மேல் "ஸ்வஸ்திஸ்ரீ விக்ரம பாண்டியன் திருவீதி, ஆறும் வகுப்பு" என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. பக்கத்துக்கு ஒன்றுக இரண்டு கற்கள் வீதியின் இருபுறமும் நடப்பட்டுள்ளன. இதற்கும் முன் சில பர்லாங்கு தூரத்தில் இதேபோல் மற்றெரு கல்லும் உள்ளது. அதிலும் விக்ரமபாண்டியன் திருவீதி என்று எழுதப்பட்டுள்ளது. அதில் "நாலாம் வகுப்பு" என குறிக்கப்பட்டுள்ளது. 13-ஆம் நூற்றுண்டில் இப்பகுதியை விக்ரமபாண்டியன் ஆண்டிருக்கிருன். அவன் இவ்வீதியை அமைத்திருக்கிருன். வீதியின் நீளத்தைப் பல பகுதிகளாகப் பிரித்திருக்கிருன். ஒவ்வொரு பகுதியிலும் வீதியின் பெயரையும், வகுப்பின் பெயரையும் எழுதி மைல்கல் போல் நட்டிருக்கிருன். அக்காலத்திலேயே வீதியின் பெயர்களைக் குறிப்பதற்கும் பகுதிகளைக் குறிப்பதற்கும் இதுபோல கற்கள் நட்டிருக்கிருர்கள் என இதனல் அறிகிறோம். பண்டைய தமிழ் மக்களின் நகர்ப்புற நிர்மாணத்திறனுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

## சோழர் கால இசைக்கருவி

தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டிச் சிவாலயத்தில் சோழர் கால இசைக் கருவி ஒன்று உள்ளது. இத்துறைப் பதிவு அதிகாரிகளால் அதில் வாசகங்கள் இருப்பது அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதனை மல்லாண்டாரான சோழகோன் என்பவன் கோயிலுக்கு அளித்துள்ளான். அதிலுள்ள கல்வெட்டு 'இக்குடமுழா சமைப்பித்திட்டார் சிகாருடையார் மல்லாண்டாரான சோழகோனர்' என்பதே ஆகும். அதன் எடை 2303 பலம் என்ற குறிப்பும் அதில் உள்ளது. தற்போது அதன் எடை 70.5 கிலோ கிராம் உள்ளது. இதன்மூலம் அக்காலத்துப் பலம், தற்போதைய கிலோவில் எவ்வளவு என்பதை அறிந்துகொள்கிறோம். தற்போது இது 'பஞ்சமுக வாத்யம்' என்று வழங்கப்படுகிறது. அக்கருவி சோழர் காலத்தில், 'குடமுழா' என்றே அழைக்கப்பட்டதென்பதையும் இக்கல்வெட்டின் மூலம் தெளியலாம். *

# தேவடியாளை வெட்டினன்

## தெய்வம் தண்டித்தது

புதுக்கோட்டை வட்டத்தில் மலையடிப்பட்டி வாகீச்வரர் கோயிலில் இக்கல்வெட்டு இருக்கிறது. புதுக்கோட்டைக் கல்வெட்டு, எண் 904 ஆக அச்சிடப்பட்டுள்ளது. கல்வெட்டு 17-18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. பூச்சிக்குடியைச் சேர்ந்தவன் ஆவுடைதேவன் என்பவன். அவன் திருநெடுங்குளத்தில் ஒரு தேவடியாள் வீட்டுக்குச் சென்றான். அவள் அப்பொழுது வேறு ஒருவனோடு இருந்ததைக் கண்டு விட்டான். காமம் கண்ணை மறைத்தது. குரோதம் மேலோங்கியது. அத்தேவடியாளையும் அவளுடன் இருந்தவனையும் அங்கேயே வெட்டிப் போட்டான். ஊருக்குத் திரும்பி விட்டான். ஊருக்குத் திரும்பியதும் அவன் பார்வை இழந்தான் தெய்வமே தண்டித்தது போலும். தன் நிலத்தைக் கோயிலுக்குக் கொடுத்து தோஷம் போக வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்தான். அதைத்தான் இக்கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு :

'பகுதானிய வருஷம் தை மாதம் 11-ம் தேதி வாகீஸ்வரஸ்வாமிக்கும் வடிவுள்ள மங்கைக்கும் பூச்சிக்குடியில் இருக்கும் ஆவுடை தேவர் திருநெடுங்குளம் தேவடியாள் வீட்டுக்கு போயிருக்கச்சே மறுபடி ஒரு பிராமணனை அழைச்சு வீட்டிலே இருந்தபடியினாலே நான் அவர்கள் ரெண்டு பேரையும் வெட்டிப் போட்டு மலையடிக்கு வந்த இடத்திலே ரெண்டு கண்ணும் தெரியாதே போனபடியினாலே இத்தோஷம் போக வாகீச்வர சுவாமிக்கு என்னுடைய கல்லு போட்டு குடுக்குறோம் என்று வேண்டிக் கொண்டு எனக்கு கண் தெரிஞ்சபடியினாலே என்னுடைய காணியான ஆவுடையான் குடிக்காடு நான்கெல்லை உட்பட்ட நிலமும் கல் போட்டுக் குடுத்தேன். இந்நிலம் ஸ்வாமி சந்நிதியில் சிலாசாதனமும் எழுதிக் குடுத்தேன் இந்த நிலத்தில் யாதாமொருவன் பெசகு பண்ணினால் வாகீச்வரசுவாமி சன்னிதி தொரோகியாகி போவான். கெங்கைக் கரையில் காராம் பசுவை கொன்ற தோஷத்திலே போவான்'.



# பல்லவன் தேவிக்குப் பிசாசு பிடித்தது

காஞ்சிபுரத்தில் நரசிம்மவர்ம பல்லவன் காலத்திய கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இதை மத்திய அரசு கல்வெட்டாய்வுப் பிரிவு 1954-55 ஆண்டு படி எடுத்துள்ளது (ARE 360/1954) இதை கல்வெட்டு மூதறிஞர் காலஞ்சென்ற தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் படித்து அவ்வாசகத்தை எழுதி வைத்திருந்தார்கள். வாசகம் மட்டும் கிடைத்துள்ளது. இது குறித்து அவர்கள் எழுதிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. அவர்கள் படித்த வாசகத்தைக் கீழே பதிப்பிக்கிறேன்.

[இக்கல்வெட்டு பலவழிகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தாகக் காணப்படுகிறது. இதில் உள்ள முக்கியச் செய்தி:-

பல்லவ அரசனுடைய தேவிக்குப் பிசாசு பிடித்தது அதை ஆஜீவக மதத்தைச் சேர்ந்த கௌதமன் என்பவன் தீர்த்து வைத்தான். அதற்காகச் சமணர் கோயிலின் வழிபாட்டுக்காக ஓர் ஊர் தானமாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

பல்லவ அரசன் நரசிங்கப் போத்தரையன், ஆண்டு 18-வது. இவ்வரசன் முதல் நரசிம்மனா? இரண்டாம் நரசிம்மனா? என்னும் ஐயம் எற்படலாம். இவன் இரண்டாவது நரசிம்மனாகிய இராஜசிம்மனாக இருக்கலாம். இக்கல்வெட்டில் லோகமகாதேவி என்னும் அரசியைப் பிசாசு பிடித்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் கைலாயநாதராலயத்தில் ஒரு சிறு கோயிலில் லோகமகாதேவி என்பவள் குறிக்கப்படுகிறாள். ஆதலின் இக்கல்வெட்டு இராஜசிம்மன் காலத்தது எனலாம்.

இராஜசிம்மன் சிவசூடாமணி என்று பட்டம் ஏந்திய சிறந்த சிவபக்தன். வியத்தகும் கைலாயநாதராலயத்தைக் காஞ்சியில் கட்டியவன். அவனுடைய கோயிலில் இரங்கபதாகை என்பவளும், லோகமகாதேவி என்பவளும் சின்ன சிவாலயங்கள் எடுப்பித்துள்ளனர். இக்கல்வெட்டில் பிசாசு பிடித்தவள் லோகமகாதேவி. அதை நீக்கியவன் ஆஜீவகப் பிரிவைச் சேர்ந்த சமணத்துறவி. அதற்காக அரசன் சமணப்பள்ளிக்கு ஊர் அளித்திருக்கிறான். இதிலிருந்து அன்று அனைத்துச் சமயங்களுள்ளும் சுமுக உறவு இருந்திருக்கிறது என்று அறியலாம்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சமணத் துறவிகள் மருத்துவத் துறையிலும் மாந்திரீகத் துறையிலும் சிறந்திருந்தார்கள் என்று அப்பர், ஞானசம்பந்தர் ஆகிய நாயன்மார்களின் வரலாற்றிலிருந்து அறிகிறோம். இவை இலக்கியத்திலிருந்து அறியும் செய்தியாகும். இதை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது.

சோழர் காலக் கல்வெட்டுக்களில் அரசின் நிலவருவாய்த்துறை மிகச் சிறப்பாக விளங்கியதைக் காண்கிறோம். புரவுவரி, புரவுவரி நாயகம், புரவுவரித் திணைக்களம், புரவுவரித் திணைகளத்துக் கண்காணி முதலிய பதவிகள் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன. இக்கல்வெட்டில் குணமங்கலங்கிழான் என்பவன் 'புரவுவரி நாயகன்' என்று குறிக்கப்படுகிறான். ஆதலின் பல்லவர் காலத்திலேயே 'புரவுவரி' பதவிகள் அமர்த்தப்பட்டுச் சீராக செயல்பட்டன என்றும் அறிகிறோம். சமண சமயத்தில் ஆஜீவகம் என்னும் பிரிவு தமிழகத்தில் சிறந்து அரசரிடம் செல்வாக்கும் பெற்றிருந்தது எனவும் அறிகிறோம்.] — ஆசிரியர் குறிப்பு.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ நரசிங்கப் போத்தரையற்கு யாண்டு பதினெட்டாவது லோக

2 மாதேவியாரை வைஷ்ணவரக்ஷம் பற்ற ஸ்வதர்மரஷணம் . . கூடமதீ

3 . . விலமகிகளெல்லாம் உருவசநத்தோந் ஸமிமியெல்லாம் இறங்கலிட அம்மொழி கேட்டு ஆஜீவ

4 க டிமஷபகத்து அவர் நெறி வழாமை இநந்த ஸ்ரீ பாசங்களாத பள்ளி ஆசாயூஷர் சாணுக்கனெந் நற்

5 கௌதமநெந் சமணன் மாதேவியை மாசெதுய பட்டிநத்து அறங்களெல்லாமிறங்கல் மீட்டு மதூ ஸா

6 . . மகிமொடு கூற மந்நவனு மநக் கொண்டு வூக்ஷத்தி நா . நல்லறம் பேணி அறிவர் கோயில் முநிவரு

7 முறையுளுதாந . க்தே . . . எழிவிய . . . மகிழம் பள்ளி யெனப் பியர் பெற்ற அதந் கீழ்பாற்கெல்லே

8 மனைப் படப்புக்கு மேற்கும் மேல்பாற்கெல்லே வதிக்கு கிழக்குப தென்பாற்கெல்லே காலுக்கு வடக்கும் வடபாற்கெல்

9 லே மதிளுக்கு தெற்கு மூண்ணில மொழிவின்றி மகிழம் பள்ளி அதற்புறமாக அணுக்கப் பல்லவந் சரு . . .

10 விண்ணப்பத்திஞல வெண்குன்றக் கோட்டத்து போர் மலி பூண்டிய மெயிற் கோடடத்து துண்டுணுக்க சேரி நாகர் பட்டி தந்நி

11 . . . பட்டியாகிய நிலநு . . மானே நடத்து கண்காணி மெய்காப்பான் அறிஞ்சயந் உடை

12 யான் மாணி திருக்காளியும புரவுவரி நாசகன் சி குணமங்கலங் கிழானும் . . . உடையான் . . ங்கா . . . திழ . . .

**இரண்டாவது துண்டு :**

1 ம் அரைசு முதலாக பஞ் . . . .

2 று முன்னடத்தி மகிழம்பள்ளிப் புற . . . . க்க . . . . டு வள்ளுவ . . .

3 க்கம் ஆப்புழார் . . மனே ஆறேகாலும் அறக்கோவல்லதாழ் கோவடி

4 வென் ஆசற நீக்க மகிழம்பள்ளிச் சேரி என்று நாமங் குறித்து பூரண

5 படிமம் பொலிவுற பொங்கி ஆஜீவகர் தம்மால் மென் . .

6 இவ்வறங் காப்பானடி என் முடி .

7 கொற்றங்கோன் ந .

# திருக்கோயிலூர்ப் பாட்டு

டாக்டர் இரா. நாகசாமி M.A. Ph.D.

முல்லைப்பாட்டு என்றும் குறிஞ்சிப்பாட்டு என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம் பட்டினப்பாலையை வஞ்சி நெடும்பாட்டு என்பதும் அறிவோம். சங்கப் பாடல்கள் பத்தின் தொகுப்பைப் 'பத்துப் பாட்டு' என்று அழைப்பதும் அனைவருக்கும் தெரியும். அவ்வாறு இருக்க இஃது என்ன 'திருக்கோயிலூர்ப் பாட்டு' என்று நினைக்கிறீர்களா! ஆம். இந்த சங்கப் பாடல்களை நினைவில் கொண்டுதான் திருக்கோயிலூரில் உள்ள இக்கல்வெட்டை திருக்கோயிலூர்ப் பாட்டு என்று கூறுகிறேன்.

சங்கப் பாடல்களைப்போல் இக்கல்வெட்டு முழுவதும் ஒரு நெடும் பாடலாக ஆசிரியப்பாவில் திகழ்கிறது. இக்கல்வெட்டை இயற்றியவன் சங்கப் பாடல்களை நன்கு கற்றுச் சுவைத்தவன். இப்பாடலில் சங்கப் புலவன் கபிலனை இவன் குறித்துள்ளான். இக்கல்வெட்டு தொன்மை மரபில் இயற்றப்பட்ட ஒரு சிறந்த இலக்கியமாகவும், கல்வெட்டுச் செய்தியை இலக்கியப் பாணியில் அமைத்ததால் ஒரு புதுமை இலக்கியமாகவும் திகழ்கிறது. இக்கல்வெட்டு தமிழகத்தின் தலை சிறந்த மாமன்னன் இராஜராஜன் காலத்தது என்று அறியும்போது இன்னும் பெருமிதம் அடைகிறோம். இராஜராஜனது அவையில் அறங்களை எடுத்துரைக்கும் சோழ அதிகாரியாகத் திகழ்ந்த வீதிவிடங்கன் கம்பன் என்பவனால் கொடுக்கப் பட்ட கொடையை இது குறிக்கிறது. ஆதலின் கல்வெட்டு வீதிவிடங்கனைப் புகழ்வதாக முடிகிறது.

பத்துப் பாட்டில் சில பாடல்கள் :

குன்று சூழிருக்கை நாடு கிழவோனே — மலைபடுகடாம்

ஒளிறிலங் கருவிய மலை கிழவோனே — பெரும்பாண்

காவிரி புரக்கு நாடு கிழவோனே — பொருநர்

பழமுதிர் சோலை மலை கிழவோனே — முருகாற்றுப் படை

என முடிகின்றன.

இம்முடிவுகள் போலவே இக்கல்வெட்டும் வீதிவிடங்கனைப் புகழ்ந்து நலந்தரு பொன்னிநாடு கிழவோனே என்று முடிகிறது. இம்முடிவே, இக்கல்வெட்டை இயற்றிய புலவன் பத்துப்பாட்டுக்களை தன் கண் முன்னே நிறுத்தி இக்கல்வெட்டை இயற்றியிருக்கிறான் எனப் புலப்படுத்துகிறது.

இனி கல்வெட்டைப் பார்ப்போம். மற்ற கல்வெட்டுக்களைப் போல இக் கல்வெட்டும் அன்றாண்ட அரசனாகிய இராஜராஜனின் புகழைக் கூறுவதுடன் தொடங்குகிறது.

இராஜராஜன் - அவனது தாய்—அவள் பிறந்த மலையமான் குலம்—மலையர்களின் தலைநகரம் கோவலூர்--அங்கு சங்கப் புலவன் கபிலன் விண்ணுலகெய்திய கல்--அங்குள்ள சிவபிரான்—சிவபிரானின் வழிபாட்டுக்குக் கொடுக்கப்பட்ட நிலம்

அதன் வருவாயில் யார் யார் பங்கு பெற்று வழிபாடு செய்ய வேண்டும் எனப் படிப்படியாகக் கூறி அதற்காக தானம் அளித்தவன் வீதிவிடங்கன் சுபன்—அவனே நலந்தரு பொன்னி நாடுசூழவோன்'' எனக் கல்வெட்டு முடிகிறது.

பாட்டின் அமைதியும் பத்துப்பாட்டில் வரும் நெடும் பாட்டுக்களைப் போலவே அமைந்திருக்கிறது. நல்ல இனிய தமிழ். இலக்கிய நயம் சிறக்க ஒவ்வொரு பகுதியும் அமைக்கப்பட்டுள்ளன. கற்பனையின் சிகரத்தையே ஒவ்வொரு பகுதியும் எட்டிப் பிடிக்கின்றன என்றால் அது மிகையல்ல. அவ்வளவு சுவையுள்ள இலக்கியம் இது. சொல்லினிமையும் பொருள் செறிவும் நிறைந்து நிற்கும் இக்கல்வெட்டைப் பகுதி பகுதியாக அறிவது மிகவும் சுவை பயக்கும்.

## இராஜராஜன்

முதல் பகுதி இராஜராஜனைக் குறிக்கிறது. இராஜராஜன், தண்டமிழ் நாடன், செம்பியர் பெருமான். அவன்தான் எவ்வளவு பெரிய வீரன்! கதிரவனின் வழியில் வந்த மன்னன். மாபெரும் மாற்றரசர்களை எல்லாம் வென்று புறங் கண்டவன். பாண்டியர்களை மலைக்கு ஓட்டியவன். சேரர் வஞ்சியைக் கைப்பற்றியவன். கங்கபாடி இவனடி பணிந்தது. உதகை இவனது சீற்றத் தீயால் பற்றிச் சாம்பலாயிற்று. ஈழமண்டலத்தைத் தன் தண்டால் வெற்றி கண்டவன். தங்கள் முன்னோர் இமயத்தில் பொறித்த புலிச் சின்னத்தை புதுக்க வடதிசை நோக்கிப் படை செலுத்தியவன் இவன். இவனது வெற்றிக் குடைக் கீழ் பல நாடுகள் அடங்கின. இவ்வளவு வெற்றிச் சிறப்பு வாய்ந்தவன் சண்ட பராக்ரமன், இந்திரசமானன் என்றும் ராஜசர்வஞன் என்றும் புகழ் கொண்ட மன்னன் இராஜராஜன் என மாபெரும் வீரனாக இவன் சித்திரிக்கப்படுகிறான்.

ஜய ஜய வென்று மொழி பன்னிய வாய்மையில் பணியப்
பொலன்னியல் விசும்பரில் கதழுய பசும்பரி
வெள்ளுளை நெடுஞ்சுவற்று எடுக்க குறுந்துளைப் படுங்க
நள்ளுறப பொன்னுரன் வள்ளுற வச்சத்
தனிசகா லரசு மனக்காற் கங்குல்
குழம்புபடு பேரிருள் பிழம்புபட உருட்டிய
செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன
வழிமுதல் வந்த மஹீபதி வழிமுதல் அதிபதி
நரபதி அசுவபதி . கஜபதி கடலிடங் காவலன்
மதிமுதல் வழுதியர் வரைபுக
மற்றவர் தேவியர் அழுதுயர் அழுங்கலில் அழுங்கப்
பொழுதியல் வஞ்சியிற் காஞ்சி வகுத்த
செஞ்சிலைக் கலிங்கனை . . .
புதுமலர் வாகை புனைந்து நொதுமலர்
கங்கபாடிக் கவ்விக கொங்கம்
வெளிப்படுத் தருளி யளிப்படுக் திருளிய
சாரல் மலையாட்டுஞ் சேரன் மலைனாட்டுத்
தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத்
தொடர்நெய்க் கனகந் துகள்எழ நெடுநற்
கோபுரம் கோவை குலைய மாபெரும்
புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச்

சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
உதைகை முனெள்ளொரி கொளுவி உதைகை
வேந்தைக் கடல்புக வெகுண்டு போந்து
சூழமண் டலந்தொழ ஈழமண் டலமும்
கொண்டு தண்டு விட்டருளிப் பண்டு
தங்கள் திருக்குலத்தோர் தடவரை எழுதிய
பொங்கு புலிப்போத்துப் புகுக்கக்
துங்கத் திசுகிளிற் சேனை செலுத்தி மிக்க
ஒற்றை வெண்குடைக்கீழ் இரட்டை வெண்கவரி
தெற்றிய அலலந் திவள வெற்றியுள்
வீற்றிருந் தருளிய வேந்தன் போற்றிருந்
தண்தமிழ் நாடன் சண்ட பராகரமன்
திண்டிறல் கண்டன் செம்பியர் பெருமான்
செந்திரு மடந்தைமன் சிராஜராஜன்

## இராஜராஜனின் தாய்

இதுவரை ராஜராஜனின் சிறப்புக் கூறிய கல்வெட்டு இவனது தாயை இப்பொழுது கூறுகிறது மாவீரனாகிய இப்புலியைப் பெற்றெடுத்த இவன் தாயைப் 'புலியைப் பயந்த பொன் மான்' என்று கல்வெட்டுக் கூறுகிறது. எவ்வளவு உயர்ந்த கற்பனை! வீரமும மென்மையும் இச்சொற்களிலே எடுத்துரைக்கப் பட்டுள்ள புலமை ஈடிணையற்றது. புலி என்னும் சொல் வீரத்தைச் சுட்டுவதோ டன்றி புலிக்கொடியுடைய சோழன் என்பதையும் சுட்டுகிறது என்பது புலவனின் திறமைக்கு எடுத்துக் காட்டு. பெண்மையின் சிறப்பனைத்தையும் பூண்ட இராஜ ராஜனின் தாயை பொன் மான் என்னும் கல்வெட்டு அவளை மாதவிங் கொடி என்றும் அழைக்கிறது. இப்புண்ணியத்தாய் இராஜராஜனின் தந்தை சுந்தர சோழன் இறந்தபோது அவனுடன் தீப்பாய்ந்தாள் பூதப்பாண்டியன் இறந்த போது தடுகத மக்களை இகழ்ந்து தீப்பாய்ந்தாளே பெருங்கோப்பெண்டு அவள் மரபில் வந்தவள் அல்லவா! கொழுந்து விட்டெரியும் தனது கணவனின் ஈமத்தீயின் மத்தியிலும் அவனது திருப்புயத்தில் முயங்கிய உத்தமி என அவளைப் புகழ்கிறது கல்வெட்டு

இந்திர சமானன் இராஜசர்வஞ்ஞன் என்னும்
புலியைப் பயந்த பொன்மான
கலியைக் கரந்து கரவாக் காரிகை
சாந்த மூமைசுப் பிரிந்து முழங்கெரி நடுவனும்
தலைமகன் பிரியாத தையல்
நிலை பெறுந் தூண்டா விளக்கு
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அரைசர் தம்பெருமா னதுல னெம்பெருமான்
பரைசை வன்களிற்றுப் பூழியன் விரைசெயு
மாதவித் தொங்கல் மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர தாரன்
திருப்புய முயங்குந்தேவி . . . . .

## மலையர் குலதெய்வம்

இராஜராஜனைப் பெற்றெடுத்ததாலேயே சிறந்த இவ்வுத்தமி தன் கணவனுடன் தீப்பாய்ந்த தெய்வப் பெண் எனில் அவளது சிறப்பைக் கூறவும் இயலுமோ! இவ்வளவு சிறந்த பெண் பிறக்கும் பேறு பெற்றது மலையமான் குலம். (இராஜ ராஜனின் தாய் மலையமான் குலத்துதித்தவள்)

அவ்வளவு சிறந்த மலையமான் குலத்தோர் தங்கள் குலதெய்வமாகப் போற்றிய புண்ணியக் கோயில் திருக்கோயிலூர்க் கோயில். அவ்வூர் தென் திருக்கோயிலூர் என்றழைக்கப்பட்டது. புண்ணிய அக்கோயில் பெண்ணை ஆற்றங்கரையிலுள்ளது. குடதிசையில் தோன்றி அகரு, சந்தனம் முதலிய வாசனை மரங்கள் நிறைந்த குன்றின் உச்சியிலிருந்து பாய்ந்து புது மதகுகளும் கலிங்குகளும் ஆங்காங்கே விளங்கப் பொங்கிவரும் அலைகளுடன் பாய்ந்து வரும் ஆறு பெண்ணையாறு. அக் கோயில் உள்ள கரை புண்ணிய தீர்த்தம் என வணங்கப்பெறும்.

விருப்புடன்

வந்துதித் தருளிய மலையர் திருக்குலத்தோர்
அன்மை யாக தமரகத் தொன்மையில்
குலதெய்வ மாகக் கொண்டது நலமிகுங்
கவசந் தொடுத்த கவின்சொளக் கதிர்நுதித்
துவசந் தொடுத்த சுனதமதிற் சூழகழ்
புளகப் புதவக் கனகக் கோபுர வாயில்
மாட மாளிகை வீதித் தேசாந்தன்மைத்
தென் திருக் கோவலூரி சாந்தன்றக் கவன்றது
மிசரங் குடக்குக் கலுழி குணக்கு
கால்பமுங்கக் காளாகருவும் கமழ்சந்தனமும்
தாளார திரள்ச் சரளமு நீளார்
குறிஞ்சியும் கொகுடியும் முகடுயர் குன்றில்
பறிந்துடன் வீழப் பாய்ந்து செறிந்துயர்
புதுமதகு இடறி பொரக் கலிங்கு இடந்து
மொது மொது முதுதிரை விலகிக் கதுமென
வன்கரை பொருது வருபுனல் பெண்ணைத்
தென்கரை உள்ளது தீர்த்தத் துறையது

## கபிலக்கல்

மலையர்குலத் தெய்வமான அக்கோயில் இருக்கும் கல் கபிலக்கல் என்று அழைக்கப்படுவது. ஆம், முத்தமிழ் புலவனாக விளங்கினனே சங்கப் புலவன் கபிலன் அவன் பாரியின் பெண்ணை மலையமானுக்குக் கொடுத்து தன்பணி தீர்ந்ததென எண்ணி வீடு பேற்றை நினைந்து தீயில் பாய்ந்து உயிர்நீத்த இடம் அக்கல் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

மொய் வைத்தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கை பாரிதன டைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை

அலைபுனல் அழுவத்து அந்தரி ட்சம்செல
மினல்புகும் விசும்பின் வீடு பேறெண்ணி
கனல்புகும் கபிலக் கல்லது

சங்கப் புலவன் கபிலனைப் பற்றி சில புதிய செய்திகளை இக்கல்வெட்டுக் கூறுகிறது. கபிலன் பாரியின் பெண்ணை மலையர்க்குக் கொடுத்தார் என்பது ஒரு செய்தி. திருக்கோயிலூரில் கபிலன் வீடுபேறெண்ணி தீப்பாய்ந்து உயிர் நீத்தார் என்பது மற்றொரு செய்தி.

"பாரி தன் அடைக்கலப் பெண்ணை மலையர்க்கு உதவி" என்பது கல்வெட்டு வாசகம். அடைக்கலப் பெண் என்று ஒருமையிற் குறிக்கப்பட்டுள்ளது. பாரி மகளிர் இருவர் என்பது சங்கச் செய்தி.

ஆய்தொடி அரிவையர் (புறம். 117)
குறுந்தொடி மகளிர் (புறம் 113)
இவர் யாரென்குவை யாயின் . . . நெடுமாப் பாரி மகளிர் (புறம். 201)
பரந்தோங்கு சிறப்பிற் பாரிமகளிர் (புறம். 201)

என்றும் கபிலரே பாடிய பாட்டுக்கள் பன்மையில் கூறுகின்றன. பாரி மகளிர் பாடிய பாடலில் 'யாம் எந்தையும் இலமே' எனப் பன்மையில் குறித்துள்ளனர். அவன மகளிரை பார்ப்பார் படுக்கக் கொண்டு போவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது' (புறம். 113) என்றும் 'அவன் மகளிரைக் கொண்டு போம் கபிலர் பறம்பு நோக்கி நின்று சொல்லியது" (புறம். 111) என்றும் புறநானூற்றின் பண்டைய அடிக்குறிப்புக்களும் பன்மையிலேயே கூறுகின்றன. இவ்வாறு இருக்க கல்வெட்டில் ஒரு பெண் மட்டும் குறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் புறநானூற்றின் அடிக்குறிப்பு கபிலன் பாரி மகளிரைப் பார்ப்பார்ப் படுத்தான் எனக் குறிக்கிறது. ஆனால் கபிலர் பாரியின் பெண்ணை மலையமானுக்குக் கொடுத்தார் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

தமிழ் நாவலர் சரிதை என்னும் தொகுப்பில் பாரி மகளிரைப் பற்றிய சில செய்திகள் உள்ளன. பாரி மகளிருக்கு அங்கவை, சங்கவை என்று பெயர். இவர்களில் அங்கவையை மலையமானுக்கு மணம் செய்து கொடுத்தனர். அம்மலையன் பெயர் தெய்விகன் என்பதாம். இம்மணம் திருக்கோவலூரில் நடந்தது என்ற செய்திகள் தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகின்றன.

"சேரலர்கோன் சேரல் செழும்பூத்திருக் கோவ
லூரளவுந் தான் வருக வுட்காதே-பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமிசைந்தான்
சங்கியாதே வருக தான்"

என்பது ஒரு பாடல். இப்பாடலில் திருக்கோவலூர் அரசன் அங்கவையை மணந்து கொள்ள இசைந்துள்ளான் என்ற செய்தி காண்க. 'சங்கவையையும் கூடத்தான்' என்றும் ஒரு பாடம் உண்டு. மேலும் சில பாடல்கள் ஒரு பெண்ணுக்கு மட்டும் மணம் நடந்ததாகவே குறிக்கின்றன. ஔவை, பாண்டியனைத் திருமணத்துக்கு வர எழுதிய பாடலில் ;

... ... சையற்கு
வேண்டுவன கொண்டு விடியல் பதினெட்டா நாள்
ஈண்டு வருக இயைந்து.

என்று உள்ளது. அதேபோல் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவரும் வந்ததாகக் கூறும் பாடல்,

"சோழனும், சோழனும், பாண்டியனும்
மங்கைக சருகிட வந்து நிலுரர் மணப் பந்தரிலே"

என மங்கை ஒருவளையே குறிக்கின்றது. திருமணம் திருக்கோவலூரில் நடந்தது என்று ஒரு பாடல் குறிக்கிறது.

கருணையால் இந்த கடல் உலகங் காக்கும்
வருணனே மாவலையான் கோவற் பெருமணத்து
நல்பாரி தாழிகொண்ட நண்ணீரது தவிர்த்து
பொனமாரி யாகப் பொழி"

இப்பாடல்களிலிருந்து ஒன்று புலப்படும் பாரி மகளிரில் ஒருவரை மலையமான் மணந்து கொண்டான். அத் திருமணம் திருக்கோயிலூரில் நடந்தது என்ற செய்தி இராஜராஜன் காலத்துக் கல்வெட்டில் குறித்துள்ளது. தமிழ் நாவலர் சரிதையிலும் காணப்படுகிறது. தமிழ் நாவலர் சரிதை கி.பி. 17ம் நூற்றுண்டில் எழுதப்பட்டது எனத் தமிழ்ப் பேரறிஞர் மு அருணசலம் கருதுகிறர். ஆதலின் கல்வெட்டில் காணப்படும் செய்தி மிகவும் அண்மைக் காலம் வரை வழக்கிலிருந்தது என்பது தெளிவு.

## கோவலூர் வீரட்டானம்

இவ்வளவு சிறப்பு வாய்ந்தது திருக்கோயிலூர் வீரட்டானம். எட்டு வீரட்டானம் என்று புகழப்படும் வீரட்டானங்களில் இதுவே தொன்மையானது. பெரும் யோகிகள் எல்லாம் வந்து தங்கும் பெருமையுடையது இங்கு ஆகமத்தை தொழும் அந்தணர்கள் ஆகமத் தொழில் வழுவாது அர்ச்சனை புரிவர். எழில்மிகு பாவையர் நாட்டியம் புரிவர். இசைக் கவிகள் எல்லாம் இனிமையாக இசைக்கும் ஒலி நிறைந்தது. பக்தர்கள் எல்லாம் மனம்நிறைந்து பாடுவர். அரஹர என்னும் பேரொலி விண்ணைப் பிளக்கும் வகை பக்தர்கள் குழுமிய புண்ணியத்தலம், ஈசர் கோயில் என கோயிலூர் வீரட்டானம் கல்வெட்டில் புகழப்படுகிறது.

புனல்வளர் பேரெட்டான வீரட்டானம்
அனைத்தினும் அநாதியாயது நினைப்பினும்
உணர்தற்கு அரியது யோகிகள் உள்ளது
புணர்தற்கு இனியது பொய்கைக் கரையது
சந்தன வனத்தது சண்பகக் கானது
நந்தன வனத்தின் நடுவது பந்தல்
சுரும்படை பெண்பூங் கரும்பிடை துணித்தர
ஆட்டொலி ஆலை அயலது பாட்டொலிக
கருங்கைக் கடையர் பெருங்கைக் கடைவாள்
பசுந்தாட்டியும செந்நெல் பழனத் தசும்பார் கணியும்
. . . . . அருக்கன் அரிச்சனை முற்றிய

நான்மறை தெரிந்து நூன்முறை உணர்ந்து ஆங்கு
அருச்சனை விதியொடு தெரிச்ச ஆகமத் தொழில்
மூவெண் பெயருடைய முப்புரி நூலோர்
பிரியாத் தன்மை பெருந்திரு உடையது
பாடகச் சீரடி பணை முலைப் பாவையர்
நாடகத் துழுதி நவின்றது
சேடகச் சண்டையும் சுண்டையும் தாளமும் காளமும்
கொண்டதிர் படகமும் குளிறு மத்தளங்களும்
கரடிகைத் தொகுதியும் கைம்மணிப் பகதியும்
முருடியல் திமிலை முழக்கமும் மருள்தரு
வால்வளைத் துணையும் மேல் வளைத் தணையும்
கருப்பொலி மேகமும் கடலும் எனக் கஞலி
திருடபொலி திருட்டலி சினத்து விருட்பொலி
பத்தர் தம் பாடல் பயின்றது
முத்தமிழ் நாவலர் நாற்கவி நவின்றது
ஏவலில் அருளையோடு அரகர எனக் குனித்து
அடிமை செய் பருஷையர் பகுவிதம் பயின்றது
அருஷை முக்கண்ணவன் உறைவது கடவுளர் நிறைவது
மண்ணவர் தொழுவது வானவர் மகிழ்வது
மற்றும் இன்ன வளங்கொள் மதிற் பதாகை
தெற்றுங் கொழுநிழல சிவபுரத்தாற்கு

கோயிலுக்கு தானம்

வீரட்டானத்து உறைகின்ற பெருமானுக்கு வழிபாட்டுக்குக் கொடுத்த தானத்தையும் கல்வெட்டு பாடலாகவே கொடுத்துள்ளது. கொடுத்த தானம் தேவன்குடி என்னும் ஊர் நிலமாகும். இந்நிலம் 12 சாண் நீளம் ஒரு கோல் என்னும் அளவு. இந்த 12 சாண் கோல் அளவால் 160 குழி கொண்டது ஒரு மா நிலம். $6\frac{1}{4}$ வேலி நிலம் இவ்வாறு தானமாக அளிக்கப்பட்டது. (சற்றேறக்குறைய 20 மா கொண்டது ஒரு வேலி) இந்நிலத்திலிருந்து 1 மா நிலத்துக்கு 6 கலம் இறையாக 720 கலம் அளிக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதிலிருந்து வரும் வருவாயிலிருந்து என்னென்ன செய்தல் வேண்டும் என்றும் கல்வெட்டு குறிக்கிறது.

பன்னுள் நிலைபெற முன்னுள் உரவோன்
செய்த தானம் தேவன் குடியில்
அலகியல் மாபில் அமைந்து உலகியல்
சாண் பன்னிரண்டில் சமைந்த தனிக்கோல்
போற்றுற வளந்த நூற்றறுபது குழி
மா வொன்றாக வந்த வேலி ஆறே காலில்
அந்தங் களைந்து நீங்கிய நிலத்தால்
நீங்கா நெற்றுகை ஆங்கொரு மாவிற்கு அறுகலமாக
கொழு நூற்றுவராடும் கூட்டி அளந்த
எழுநூற்றிருபதில் இறை மகற்கு உரிமை
நாழி எட்டான ஊழி அட்டானக்

கருங்கால் ஒன்றல் செங்கை இரண்டிட்டு
அளந்த நெல்லாற் றறுபதினில கலந்த
நிவந்த தன்மை நினையில் உவந்து
நஞ்சுண்ட வர்க்கு அமுதுண நயந்த
ஒத்தெண் வழுவாப் பத்தெண் குத்தல்
பழ நெல்லரிசி பன்னிரு நாழிககு
பதினை இரட்டி நெல் பதினை இரட்டியும்
குறுவாளான நெடுவாண யனிக்கு
ஓரிரு நாழி யுள்படுத் துயர்ந்தநெல்
நாலெட்டான நாழியும் மெ . . .
மிளகு முப்பிடிக்கு செல்லக் குடுத்த நெல் லஞ்ஞாழியும்
சூழ் கறி துவன்ற போழ் கற் கொள் நெல்
நால் உரி உருக்கிய நறு நெய்
உழக்கரை தனககு வழககரை வினவில்
முந்நாழியுந் தயிர் முந்நாழிக்கு ஆங்கு
அறுநாஞழியும அடைக்காய் அமிதுக்கு
பந்திரு உழக்கும் பரிசாரகமானன்
நான்கினுககு நெல் அறு நாஞழியும்
திருமடைப் பள்ளிப் பெருமடைக்குதவும்
இநதன ஒருவற்குத் தந்த முன்ஞழியும்
ஆக நெற்கலமுட ஏக நற்றிவசம
அப்பரிசு இயற்றலில் அறு வகை இருதுவும்
இப்பரிசு இயற்றி எழுந்து நேரான

தேவன் குடியிலிருந்து வந்த நெல் 720 கலமும் கொண்டு செய்ய வேண்டியவை

| | |
|---|---|
| நாள் 1க்கு அமுது படிக்கு 18 குத்தல் பழநெல்லரிசி 12 நாழிக்கு | 32 நாழி நெல் |
| மிளகு 3 பிடிக்கு | 5 நாழி நெல் |
| கறி | 4 உரி |
| நெய் $1\frac{1}{2}$ உழக்கு | 3 நாழி |
| தயிர் 3 நாழி | 24 நாழி |
| அடைக்காயமுதுக்கு | 12 உழக்கு |
| பரிசாரகர் 4-வர்க்கு | 24 நாழி |
| விறகுக்கு | 3 நாழி |

பிற ஊர்களில் அளிக்கப்பட்ட நிலங்களின் அளவுகள்

| | | | |
|---|---|---|---|
| கோவலூரில் | 15 மா நிலம் | இலுப்பைக்கால் | 2 மா ,, |
| மேட்டுக் கொல்லை | 3 மா ,, | புல்லாலிபுரம் | 5 மா ,, |
| ஆலஞ்செறு | 5 மா ,, | ஆக மொத்தம் | 32 மா நிலம் |
| தேங்காச்செறு | 2 மா ,, | | |

இந்நிலங்கள் அர்ச்சனாபோகத்திற்காக அளிக்கப்பட்டன. மேலும் பிற இடங்களில் கொடுக்கப்பட்ட நிலம்.

| | | | |
|---|---|---|---|
| முணங்கல் பூண்டி | 36 மா | களர் நிலம் | 10 மா |
| பசுவந்தக் கழனி | 28 மா | காயம்பள்ளம் | 2 மா |
| படித்தழான் வேலி | 8 மா | கணியக்கழனி | 8 மா |
| பழனக் காடு | 5 மா | | |

ஆக இவற்றில் இருந்த வந்த நெல் 522 கலமும் 66 கலமும் ஆகும்.

முணங்கல் பூண்டியிலிருந்து 267 கலம் நெல் வந்தது (300க்கு 33 குறைவு) இவற்றில் இருந்து வருவது கொண்டு

அமுதுக்கு 1 தூணி நெல்
நெய் 3 பிடிக்கு 6 நாழி
தயிர் 3 நாழிக்கு 6 நாழி
அடைக்காயமுது 6 உரி

அபிஷேகம் செய்யும் மாணிக்க 1 குறுணி 4 நாழி.
வேதம் படித்த ஏவல் மாணிக்கு 1 குறுணி 4 நாழி

மேலும் திருவிளக்கு 80க்கும் இவை பயன்பட்டன. இவை தவிர ஆலியூர் என்ற ஊரில் சமணர் கோயிலுக்கு சொந்தமான பள்ளிச் சந்தம் (முக்குடையவர் தம் அறப்புறம்) நீக்கி $3+\frac{3}{4}+\frac{1}{8}$ வேலி நிலம் இதிலிருந்து வந்த நெல் கீழ் வருபவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க நிர்ணயிக்கப்பட்டது.

32 நாடகமகளிர்க்கும்
பஞ்சாசாரியருக்கு
நந்தவனத்துக்கு நீர் இறைப்போர்க்கும்
யோகி ஒருவனுக்கும்
திருவாய்க் கேழ்வி ஒருவனுக்கும்

கொடுக்க நிச்சயிககப்பட்டது.

புதுமலர் விரிந்து மதுமலர் சோலைப்
புள்ளூர் கோவல் உள்ளூர்ப் பழநிலம்
இரட்டு முக்காலிற் றந்த பதிலைஞ்சு மொட்டுக்
கல்லைக களர் மூன்று மாவும்
ஆலஞ் செறுவில் அஞ்சு மாவும்
திரண்டுபாய் புனல் தேங்காச் செறுவில்
இரண்டு மாவும் இலுப்பைக் காலிரண்டும்
நெல்வாலித் தெழும புல்லாலிப் புறம்
அஞ்சொடும் கூடடி ஆகிய நிலத்தொகை
அடடுத் திரண்டியல் மா முப்பத்திரண்டும்
மேலாறு உணர்ந்த நாலாறு எண்பயில்
அந்தணர் அனைவர்க்கும் அர்ச்சனு போகம்
தந்தபின்னைத் தடமலர்ப் பொய்கைப்
போதகர் பழனப் புதுமலர்ச் சோலைச்
சிதாரி பல மஞ்சு மஞ்சாமல்
கேட்ட திருவையயன் கோட்டமில் குணத்தால்
செயபொற் புரிசை சிவபுரத் தார்க்கு
கோவல் அந்தணர் பால் கொண்டு கொடுத்தன

பண்டைக் கோலால் பண்டை குழித் தொகை
மணங் கொண்டிரண்டு முணங்கல் பூண்டி
ஒப்பத் தொறுமா முப்பத் தறுமாவும்
மிகவந்துயர் புனல் பகவந்தக் கழனி
எட்டு முதல் இருபது மாவும்
மட்டலிழ் பூத்துழாவிய புனல் மாத்துழான் வேலி
ஏவிய எட்டு மாவும் வாவியில்
கோடெறு பழனக் காடெறு மாநிலம்
அஞ்சும் களர்நிலம் பத்தும் நெஞ்சத்
துள்ளத் தகும்புனல் உரவுக் கடலுகாயம்
பள்ளத் திரண்டும் பாவரும் கணியக்
கழனியில் எட்டும் கைகலந்து ரைப்பில்
உழனி . . .
மேற்படி காலால் பாற்பட வளந்த
இங்குடனவர் பாங்குடன் தொகுத்த
மெஞ்ஞூற் றுரைகையில் மேதகு தூநெல்
அஞ்ஞூற் றிருபத் திருகலம் என
மற்றைத் தொகையில் மதிவளர் சடையோன்
பெற்ற வாரம் பிழையறப் பேசில்
ஐம்ப திற்றைஞ் சொடு மொய்ம்புறு
பதினெரு கலத்தொடு முணங்கர் பூண்டியில்
கறைநெல் நஞ்சை நீக்கிப்
புஞ்சை நான்மா மாத்தால்
கலவரை யான வரையறை அறுகலம்
ஏற்றிப் பெறுகல வளவை மூன்ருெடு
முப்பது குறைந்த முன்னூற்றுக் கலத்தில்
மற்றக் கண்ணுதற்காக நிலத்த வருவந்த நிவந்தம்
நலத்தகு நாள் ஒன்றினுக்கு நால் முன்னுழி
பானிறத் தன்மை தூநிறக் குத்தல்
அரிசியி லான நெல்லு வரிசையில்
குறுபவள் கூலி யேற்றி பெறுவன
பேணிய பழநெல் தூணியுங் காணியவை
அமுது புகழு நெய்யமுது முப்பிடி
கொள்ளக் கொடுத்த நெல்அறு நாழியும்
பொழுது மூன்றினுக் கிழுதுபடு செந்தயிர்
ஒரு முன்னுழிக் கிருமுன் னுழியும்
அடைக்காய முதுக்கு ஆறு உரியத்து
அந்தணன் ஒருவன் அபிஷேகம் செய்ய
தந்தன குறுணி முற்றதைந்த நாஞழியும்
மறைவேல் செய் மாண் இரண்டினுக்கு
குறைவறக் குடுத்த நெல் குறுணி நாஞழியும்
ஓராண் டினுக்கு டேராண் டாக

நண்ணிய நக்ஷத்திரமென நல்லோன்
எண்ணிய திருவிளக்கு எண்பதும் கண்ணெனக்
காவியர் கயர் கயல் பயில் ஆவியூரதனில்
திக்குடையிவரும் முக்குடை யவர்தம்
அறப்புற மான திறப்பட நீக்கிச்
சாலி விளைநிலம் வேலி யாக்கி
முதல்வதின் மூன்றே முக்காலே அரைக்கால்
இதன்தனி வந்த இயல்வகை உரைப்பில்
ஒப்பத் திருவனையவர் முப்பத் திருவர்
பாடல் பயின்ற நாடக மகளிர்க்கும்
நெஞ்சா சார நிறைவொடு குறையா
பஞ்சா சாரியப் பகுதி யோற்கும்
நறைப் புதுமலர் விரி நந்தவானம்
இறைப்புத் தொழில் புரிந்த இருந்தவத் தோர்க்கும்
யோகி ஒருவனுக்கு நியோகமுடைய
. . . . . . . . . . . . . . . . .
செஞ்சடைக் கடவுள் திருவாய்க் கேழ்வி
தஞ்சடைக் கடிகையன் தனக்கும்

## பாட்டுடைத் தலைவன்

இந்நிலந்தங்களைக் கூறும் கல்வெட்டு இவற்றை யார் கொடுத்தார் எனக் கூறும் பகுதியில் வீதி விடங்கன் கம்பன் என்பவன் இவற்றை அளித்த கொடையாளி எனக் கூறுகிறது. இவனே பாட்டுடைத்தலைவன்; இவனைக் கூறும் பகுதியும் படித்துப் படித்து இன்புறத்தக்கது.

இவ்வீதி விடங்கன் இராஜராஜசோழனுடைய அவையில் அறங்களை எடுத்துக் கூறும் அதிகாரி. இவன் அம்பர் நாடன், மணற்குடி நாடு ஆலங்குடி, திருமுர், முதலிய ஊர்களை உடையவன். அரசனது ஏவல் கேளாது இருந்த மாற்றார்களைத் தண்டித்து புலிச் சின்னத்தின் புகழ் சிறக்க உழைத்தவன். நித்தவிநோதன் என்றும் அருள்மொழி என்றும் பெயர் பெற்ற இராஜராஜனது காரியத்தைத் தவிர வேறு எக்காரியத்தையும் நினையாதவன். சிவபிரானுடைய நெற்றிக் கண்ணையும் சிந்தாமணியையும் போன்ற புகழ் பெற்றவன். யானை ஏற்றத்திலும் குதிரை ஏற்றத்திலும் சிறந்தவன் இவ்வளவு சிறப்பு பெற்ற கம்பன் ஆகிய வீதி விடங்கன் கரும்பாலைகள் நிறைந்த பொன்னி நாடு கிழவன் எனப்பாடல் முடிகிறது.

நெஞ்சில் விதித்த முறைமை மதித்து நோக்கி
இன்னவை பிறவு இராஜராஜன்
தன்னவை முன்னற் தத்துவ நெறியில்
அறங்கள் யாவையும் இறங்கா வண்ணம்
விஞ்ஞா பனத்தால் மிகவெளிப் படுத்தோன்
அன்பது வேலியில் அடைகுன் றகர்க்கும்
ஒன்பது வேலி உடைய உரவோன்
கொம்பர் நாடும் குளிமலர்ச் சோலை

அம்பர் நாடன் ஆலங் குடிக்கோன்
தெண்டிரை பழனந் திரைமூர் நாடன்
வண்டிரை துயர்பொழில் மணற்குடி நாடன்
நேரிய அருமொழி நித்த விநோதன்
காரியம் அல்லது காரியம் நினைபா
தாரான் தலைமை சுற்பக சதுசன
போரான் தலைமை புனர்புயத்து உரவோன்
கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த
கண்டகர் கரிசறக் துறிசற் கலிசெக
மண்டல சுத்தியில் வயப்புலி வளர்த்தோன்
வான்பால் மதியும் வலம்புரி இடம்புரி
ஆன்பால் வதியும் விரிசடைக் கடவுள் நெற்றிக்கண்ணும்
நிலத்தவர் நினைந்த தெற்றிக் கண்ணும்
சிந்தாமணியும் போலப் பிறந்த புகழோன்
கோலக் கருங்களிற்று உழவன் கம்பத்தடிகள்
மாதிவிடங்கு வருபரிவல்ல வீதிவிடங்கன்
மென்கருப் பாலை தலந்தருந் தண்டலைத்
தடநீர் நலந்தரு பொன்னி நாடு கிழவோனே

## கி. பி. 1000ல் சங்கப் பாடல்களின் செல்வாக்கு

சங்க நூற்களை கி பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று வரலாற்றாசிரியர் கூறுவர். இவை எழுந்த ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இராஜராஜன் காலத்தில் (கி பி 1000) சங்க இலக்கியங்கள் மீண்டும் சிறப்பாகப் படிக்கப் பெற்றன என இதனால் அறிகிறோம். இராஜராஜன் செந்தமிழைச் சிறப்பாகப் போற்றியிருக்கிறான் என்பதற்கு இக்கல்வெட்டும் ஒரு சான்று கி பி. 1-ம் நூற்றாண்டில் இராஜராஜன் காலத்தில் எழுந்த சில பாடல்கள் இது போல் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளதைக் காணும்போது இந் நூற்றாண்டில் சங்கப் பாடல்கள் பெரிதும் உவந்து படிக்கப்பெற்றன என்பது தெளிவாகும் நக்கீரதேவர் இயற்றிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பாடலும், கோபப் பிரசாதம் என்னும் பாடலும் நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைப்பிள்ளை திருத்தொகை முதலிய பாடல்களும் இது போன்று ஆசிரியப்பாவால் ஆய சிறந்த பாடல்களாகும். இவை அனைத்தும் இராஜராஜன் காலத்தில் இயற்றப்பட்டவை இவை நெடும் பாட்டுக்களாக அமைந்துள்ளதிலிருந்தும் இராஜராஜன் காலத்தில் சங்க மரபு மறு மலர்ச்சிபெற்றது எனத் தெளியலாம்.

ஆதலின் தொடக்கத்தில் கூறியதுபோல் இப்பாடலை திருக்கோயிலூர்ப் பாட்டு என்பது பொருத்தமே. இப்பாட்டின் கீழ் மேலும் மூன்று பாடல்கள் உள்ளன அவற்றிலிருந்து வீதி விடங்கன் கம்பனுக்கு மஹிமாலய மூவேந்த வேளான் என்னும் பட்டம் இருந்தது என்று அறிகிறோம்

வீரட்டானத்தாரின் முடிமேல் வைக்கப் பொன்னாலான பூ அளித்தான், மூன்று கழஞ்சு பொன்னால் பூவேலைப்பாடுடன் கூடிய மணிப்பட்டம், ஒன்றும் அளித்தான் மேலும் நூறு பொன்னால் சிவலிங்கம் ஒன்றும் அதற்கு வெள்ளியினால் பீடம் ஒன்றும் செய்து அதன்மேல் பொன் போர்த்துக் கொடுத்தான் என்றும் அப் பாடல்கள் கூறுகின்றன.

வேலியர்கோன் வீதிவிடங்கன் விறல் கப்பன்
ஆலியல் மான் சோழனதிகாரி-கோலப்
படியின்மேல் பொற்பூப் பைங்கோவல் வீரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று.

பொன் முக்கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைந்து மேற்கட்டி சொன்மிக்க
கோவலான் வீரட்டற்கு ஈந்தான் குலவோலி
காவலான் வாழ் கம்பன் கண்டு

சென்னி திறல் ஸ்ரீராஜராஜற்கு யாண்டு திகழும் இருபத்தேழில்
செழுநீர் வேலி
மன்னியகம்பன் மஹிமாலய மூவேந்த வேளான் விண்ணப்பத்தால்
மணிநீர் கோவல்
வெண்ணியல் சீர்வீரட்டத்தில் இலிங்கமொன்று பொன்னாற்றல்
செய்ததற்கு வெள்ளிப்பீடம்
பண்ணிய தொன்னூற்றுல் முக்கழஞ்சுடை அம்பொன் போர்த்ததும்
அய்ங்கழஞ்சின்மேல் பத்துமாவே.

மாபெரும் வீரன் இராஜராஜன். அவனை ஈன்ற ஈடிலாத்தாய் மலையமான் குலத்தவள் அம்மலையர் குலத்து நகர் திருக்கோயிலூர். அங்கு அனுதினமாயது வீரட்டானர் கோயில், அப்புண்ணியக்கோயில் எவ்வளவு சிறந்ததாக இருக்கவேண்டும். அக்கோயிலுக்குத் தானம் அளிக்கும் பேறுபெற்றவன் கம்பன் வீதி விடங்கன் எனில் அவன் புகழ்தான் என்னே !

---

சொல்லாராய்ச்சி

## மழவர், உழவர், இழவர்

மழவர் என்ற சொல் மழு என்னும் சொல்லிலிருந்து தோன்றியிருக்கக் கூடும் எனத்தோன்றுகிறது. மழு=கோடரி. கோடரி தாங்கியவர் என்ற பொருளிலிருந்து மழவர் எனும் சொல் தோன்றியிருத்தல் கூடும் உழு என்பதிலிருந்து உழவர் தோன்றியதுபோல்; மழு என்ற சொல், பெயர்ச்சொல்லாகவும் உரிச்சொல்லாகவும் தமிழ் லெக்ஸிகனில் குறிக்கப்பட்டுள்ளது. வினைச்சொல்லாகவும் முன்னர் இருந்திருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. மழுக்கு மழுகு முதலிய சொற்கள் இதிலிருந்து தோன்றியிருக்கவேண்டும். இதேபோல் ஈழவர் என்ற சொல்லும் இழ என்பதிலிருந்து தோன்றியிருக்கக் கூடும். மரத்திலிருந்து தேங்காயை இழுப்போர் பறிப்போர் என்னும் பொருளில் இச்சொல் தோன்றியிருக்கக் கூடும். முதலில் இச்சொல்லில் இழவர் என 'இ' குறிலாகவே இருந்திருக்க வேண்டும். இழு=இழவர் என.

திருப்பரங்குன்றத்தில் உள்ள கி.மி. முதல் நூற்றாண்டுக் கல்வெட்டில் 'இழ குடும்பிகன்' என்று ஒரு சொல் உள்ளது. இ' எழுத மூன்று புள்ளிகள் எழுதப்பட்டுள்ளன. மூன்று புள்ளிகள் குறிலை எழுதவே பயன்படுத்தப்பட்டன இதே காலத்தில் எழுதப்பட்ட ஆனைமலைக் கல்வெட்டில் 'இவ' என்ற சொல்லில் இ' மூன்று புள்ளியாகத்தான் எழுதப்பட்டுள்ளது. ஆதலின் 'இழ குடும்பிகன்' என்று படிப்பதே சிறந்தது. ஆதலின் பண்டைய சொல் 'இழவா' என்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது.

# செங்கம் கல்வெட்டு

ச. செங்கல்வராயன்
(அச்சுப்பிழை திருத்துபவர்)

கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசின் பிடி சற்றுத் [illegible] இருந்தது. அச்சமயம் ஆங்காங்கிருந்த குறுநில மன்னர்கள் சமயத்திற்[illegible] தங்களுக்குள் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டும், பிற சமயங்[illegible] மாற்றாருடன் சேர்ந்து கொண்டும் தங்களின் சுயநலத்தை வலுப்படுத்[illegible] கொண்டனர். பிற எதிரிகளிடமிருந்து தங்களைக் காக்க ஒருவருக்கொரு[illegible] செய்து கொண்ட ஒப்பந்தங்களும் ஆங்காங்கே கல்வெட்டுகளில் காணப்படுகின்ற[illegible]

செங்கம் கோயிலில் காணப்படும் அது போன்ற இரண்டு கல்வெட்டுக[illegible] இங்கே பதிப்பிக்கப்படுகின்றன. குலோத்துங்க சோழன் காலத்தில் இப்பகுதியி[illegible] ஆண்ட ஆடையூர் நாடாழ்வாற்கும் இராஜராஜ அதிகைமான் என்பவருக்கு[illegible] நடந்த ஒப்பந்தங்கள் இவ்விரண்டு கல்வெட்டுகளிலும் இருப்பதைக் காணலா[illegible]

## முதல் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு[illegible]
யாண்டு உய-வது

மலையன் வினையை வென்றான கரிகால சோழ ஆடையூர் நாட[illegible]
வாற்கு

செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லனான விக்கிரமசோழச் ச[illegible]
ராயனென்

இவ்வாண்டே ஆவணி மாஸத்துப் பதினைந்தியதியும் நாயற்றுக்கிழ[illegible]
யுந் திருவாதிரையுமான வன்று கல்வெட்டினபடியாவது

நானு மிவரு முள்ளதனையும் எங்களிலே தப்பாதிருக்கக் கடவோமாகவு[illegible]

பிறந்த பெருமாளான இராஜராஜ அதிகமானுருடன் உறவு பண்ண[illegible]
பகைகொள்ளுதல் செய்யுமிடத்து இரண்டு திறத்தோமுக்கு [illegible]
செய்யக் கடவேனாகவும்

று மிவர்கின்னாதாருடன் கூடி யிவற்கு விரோதமாயிருப்பன[illegible]
கடவேனல்லாதேனுக்கவும்

இப்படிக்குத் தப்பினேனாகில் என் ஓட்டை யான் யெடுத்[illegible]
கலச்சோறுந் தின்றேனவேன்

விக்கிரமசோழச் சம்புவராயனென்